



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தர்ம யுத்தம்

***எனது தாய் மண்ணிலே புலிப் பயங்கர வாதத்திற்கு எதிரான போர் உச்சக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையிலே நான் தற்காலிகமாக தங்கியிருந்த தமிழக மண்ணிலோ (April 09 – July 09 ) 2009 ம் ஆண்டிற்கான இந் திய நாடாளுமன்ற தேர்தல் பிரசாரங்கள் அனல் பறக்க நடந்து கொண்டிருந்தன.***

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளை பெருமளவில் பாதிக்கும் என நம்பியதால் பெரும்பாலான இந்திய அரசியல் வாதிகளும் தமிழ் ஊடகங்களும் பயங்கரவாதத்திற்கு எதிரான இந்த உள்நாட்டு போரை "தமிழ் இன அழிப்பு" என திரிவு படுத்தி பிரசாரத்தை மேற் கொண்டு வந்தன. ஆனால் அரசியல் தீர்க்க தரிசியான தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் "இலங்கை பிரச்சினை தேர்தல் முடிவுகளை எவ்வகையிலும் பாதிக்காது." என ஆணித்தரமாகச் சொன்னார். இந்திய மத்திய அரசும் இது இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்பதில் உறுதியாக இருந்தது. அமரர் ராஜீவ் காந்தியின் புதல்வரும் அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் தலைவருமாகிய ராகுல் காந்தி அவர்கள் "புலிகள் பயங்கரவாதிகள் அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தே கிடையாது" என உறுதியாக சொன்னார்.

அகில இந்திய ரீதியிலே மற்றுமொரு பெரிய கட்சியான பாரதீய ஜனதா கட்சி மற்றும் இந்திய கம்னீயூஸ்ட் கட்சி என்பன எமது உள்நாட்டு யுத்தத்தை தங்களின் முக்கிய தேர்தல் பிரசாரமாக மேற் கொள்ளத் தொடங்கின. சிவாஜிலிங்கம் , இரா சம்பந்தம் போன்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் இவர்களுடன் மேடையில் ஏறி இலங்கை அரசிற்கெதிராகவும் , மாண்பு மிகு எமது ஜனாதிபதிக்கு எதிராகவும் அருவெருக்கத்தக்க முறையிலே பிரசாரங்களை மேற்கொண்டார்கள் , பத்திரிகைகளில் பேட்டியும் அளித்தார்கள். தமிழகத்திலோ புலிப் பணத்திலே கட்சி நடத்தும் வை.கோ (ம.தி.மு.க) , ராமதாஸ் (பா.ம.க) , நெடுமாறன் போன்ற அரசியல் அநாதைகளும் , சீமான் , பாரதிராஜா போன்ற செல்லாக்காசு சினிமா உலகத்தாரும் செல்வி . ஜெயலலிதா (அ.தி.மு.க) தலைமையில் ஒன்று கூடி இலங்கைப் பிரச்சினையை மட்டும் மையமாக வைத்து தேர்தல் பிரசாரம் நடத்தினார்கள். பிரபாகரன் கொல்லப் பட்டால் இந்தியாவில் இரத்த ஆறு ஓடும் என்றெல்லாம் தமிழக மக்களை உசுப்பி விடப் பார்த்தார்கள் . காசாவிலே கொல்லப்பட்ட குழந்தைகளின் படத்தை T.V யில் காட்சிப்படுத்தி இலங்கையில் நடந்தது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் பிரசாரம் செய்தார்கள். குமுதம் , ஆனந்தவிகடன் , ஜுனியர் விகடன் , நக்கீரன் என பல தமிழ் பத்திரிகைகளும் மக்கள் T.V , Win T.V , தமிழன் T.V , ஜெயா T.V போன்ற தொலைக்காட்சிகளும் இலங்கைப் பிரச்சினையை தங்களுடைய அரசியல் வெற்றிக்காகவும் பணம் சம்பாதிப்பதற்காகவும் பயன்படுத்திய விதங்களைப் பார்த்த போது இவர்கள் தான் உண்மையான தமிழ் இன விரோதிகள் என்பது தெளிவாகவே புரியலாயிற்று. ஆனால் இந்திய மக்கள் குறிப்பாக தமிழக மக்கள் மிக மிகப் புத்திசாலிகள். புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் இலங்கைக்கு மட்டுமல்ல , இந்திய இறையாண்மைக்கே ஊறு விளைவிக்கும் தேசத்துரோகிகள் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். அதனால் தான் தமிழகத்தில் முதல்வர் கலைஞர் தலைமையிலான தி.மு.க வையும் அகில இந்திய ரீதியில் சொக்கத் தங்கம் அன்னை சோனியா தலைமையிலான காங்கிரசையும் மாபெரும் வெற்றி பெறச் செய்து அரியணை ஏற்றினார்கள்.மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு!

இலங்கை அரசையும் இந்திய அரசையும் மட்டுமல்ல , தன்னை நம்பிய ஒவ்வொருவரையும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சதி செய்து வீழ்த்தி சில சதிகார நாடுகளின் கைப் பொம்மையாக மாறிப் போன சதிகாரப் புலிகளை , பதவியேற்ற வேளையிலேயே ஒரு அன்னிய நாட்டின் தலையீடும் இன்றி நேரடிப் பேச்சு வார்த்தைக்கு அழைத்த போது மாண்பு மிகு மகிந்தவின் வீரமும், விவேகமும்; நேர்மையும், நெஞ்சுரமும் எல்லோரிற்கும் புரிந்து போனது. வழக்கம் போலவே "பொட்டைப் புலிகள்" சதிகார நாடுகளின் பின்னால் ஒளிந்து கொண்டு சதித் திட்டத்தை மீண்டும் ஆரம்பித்தார்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்தை பலமுறை மீறி இராணுவத்தைத் தாக்கத் தொடங்கினார்கள். விவசாயிகட்கு நீர் வழங்கிய மாவிலாறு அணையை அணை கட்டி தடுத்தார்கள்.

"சண்டையா சமாதானமா எதற்கும் நான் தயார்" என எங்கள் அன்பு மகிந்த அவர்கள் அறைகூவல் விடுத்த போதும் கோழைப் புலிகள் ஒழிந்திருந்து குண்டு வீசினார்களே தவிர ஒழுங்கான பதிலை ஒரு போதும் தரவில்லை. அரசும் மக்களும் பொறுமை இழந்தார்கள். தர்ம யுத்தம் ஒன்றுக்கு மாண்பு மிகு மகிந்த அவர்கள் ஆணையிட்டார். அதைச் சிரமேற் கொண்டு மதிப்பிற்குரிய பாதுகாப்பு செயலாளர் எங்கள் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் முப்படைகளையும் தயார் படுத்தினார். தர்ம யுத்தம் ஒன்று மாவிலாறில் ஆரம்பமானது. "அதர்மம் வெல்வது போல் தோன்றினாலும் இறுதியில் தர்மமே வெல்லும்" என பகவத் கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் சொன்னது போல் மாவிலாறில் ஆரம்பமான தர்ம யுத்தம் முள்ளி வாய்க்காலில் முற்றுப் பெற்றது. அதர்மம் அழிந்தது! தர்மம் வென்றது!

19.05.2009 இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டிய ஒரு தினம். வீழுந்து மண்ணை முத்தமிட்டு இந்த வெற்றியை உலகுக்கே பிரகடனப் படுத்தினார் , ஆசியாவின் சிங்கம் எங்கள் அருமை மிகு ஜனாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். வெல்லவே முடியாதென நினைத்த 30 வருட பயங்கரவாதத்தின் இந்த முடிவை நம் நாட்டு மக்கள் குதூகலமாகக் கொண்டாடினார்கள். முழு உலகும் இந்தச் சின்னஞ் சிறிய தீவை வியந்து நோக்கியது! பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுகள் எல்லாம் புத்துணர்ச்சி பெற்றன. பயங்கரவாதத்தை எப்படி ஒழிப்பது என எம்மிடம் ஆலோசனை கேட்டன. பயங்கரவாதிகளை உருவாக்கி உரமேற்றி ஆசியாக் கண்டத்தை சிதறடிக்க சிந்தித்த சதிகார நாடுகள் எல்லாம் கதி கலங்கி நின்றன.ஆசியாவின் சிங்கம் என சிலிர்த்து எழுந்தார் எங்கள் மாண்பு மிகு மேதகு ஜனாதிபதி அவர்கள்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது எமது நாட்டுக்கு அப கீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் இந்திய திரு நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் வெகு வேகமாக பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் என்னால் முடிந்தவரை எனது தாய் நாட்டிற்காக ***தமிழகத்தில் இருந்தவாறு எழுத்திலும் , நேரிலும் , தொலைபேசியிலும் நான் மேற்கொண்ட பிரசாரங்களின் மொத்தத் தொகுப்பே இந்தப் புத்தகம்.***

மண்ணை முத்தமிட்டு இந்த மண்ணின் மகிமையை மாண்புற செய்த இந்த மண்ணின் மைந்தன் மாவீரன் மேதகு ஜனாதிபதி மகிந்த அவர்களின் மலர்ப் பாதங்களில் இந்த மலரை மகிழ்வுடனும் மரியாதையுடனும் சமர்ப்பித்து மகிழும் அதேவேளை மண்ணின் மைந்தர்களாகிய நாம் எல்லோரும் மாண்பு மிகு மேதகு மகிந்த அவர்கள் மிக மிக நீண்ட காலம் இந்த நாட்டின் சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியாக , தலைவனாக எம்மை எல்லாம் வழி நடத்த வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனிடம் தொடர்ந்தும் பிரார்த்தனை செய்த வண்ணம் இருக்க வேண்டும் என மிக மிக பண்புடனும் அன்புடனும் கேட்டுக் கோள்கின்றேன்.

## வெற்றி நமதே

**என்றும் மாறா**

**அன்புடனும் / உண்மையுடனும்**

Ravikumarr



# சமர்ப்பணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகம் செய்வோம்



நாடாளுமன்றத்துக்கான தமிழக தேர்தல் களத்தை நேரில் தரிசிக்க சென்னை வந்து தங்கியிருந்த எனக்கும் என்னைப் போன்ற பல நடு நிலையான இலங்கைத் தமிழருக்கும் இறுதியில் மிஞ்சியது வெறுப்பும் இ வேதனையும் இ ஆத்திரமும் மட்டும் தான.

தங்கள் கட்சியின் சாதனைகளை விளக்கி இனி செயற்படுத்தப் போகும் திட்டங்களை முன்வைத்து பண்பாகவும் நாகரிகமாகவும் நடந்திருக்க வேண்டிய தேர்தல் களத்தை இலங்கைப் பிரச்சினையை முன்னிலைப் படுத்தியதன் மூலம் அநாகரிகத்தின் உச்சிக்கே எடுத்துச் சென்று விட்டார்கள் , சில தமிழக அரசியல் வாதிகள். இலங்கையில் உக்கிரமடைந்து வரும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை தமிழ் இன அழிப்பு என மிகைப் படுத்தி தமிழக மக்களின் உணர்வுகளை தவறாகத் தூண்டி விட்டார்கள். இலங்கையில் செத்துக் கொண்டிருக்கும் பயங்கரவாதத்திற்கு உயிர் கொடுப்பதும் அதே பயங்கரவாதத்தை தமிழகத்தில் விதைப்பதும் தான் இவர்களின் ஒரே இலட்சியம்.

இலங்கையில் சிங்கள மக்கள் மடடுமல்ல தமிழ் , முஸ்லிம் என மூவின மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்ற எல்லாத் துன்பத்திற்கும் ஒரே காரணம் பிரபாகரன் என்ற தனி மனிதன் தான். தான் மட்டுமே தலைவனாக இருக்க வேண்டும் என்ற சர்வாதிகார தன்மையில் இவன் நடத்திய சகோதர யுத்தங்கள் தான் எத்தனை எத்தனை? சிந்திக்கத் தெரிந்த தமிழனே இருக்கக் கூடாது என்ற ஒரே நோக்கில் இவனால் படுகொலை செய்யப்பட்ட புத்தி ஜீவிகள் எத்தனை எத்தனை? பெண்களையும் சிறுவர்களையும் மிகச் சுலபமாக மூளைச் சலவை செய்து தற்கொலைக் குண்டு தாரிகளாக மாற்றி இவன் நடத்திய படு கொலைகள் எத்தனை? இந்தியாவின் எதிர் காலம் எனக் கருதப்பட்ட ராஜீவ் காந்தி அவர்களை தமிழக மண்ணிலே சிதறடித்தது இவன் தானே . கலைஞர் குறிப்பிட்டதைப் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை தலைமைத்துவத்துக்கான பயங்கரவாத யுத்தமாக மாற்றிய பெருமை பிரபாகரனையே சாரும்.

இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழர்களை விட நண்பர் பிரபாகரனால் கொல்லப்படும் தமிழர்கள் மிக மிக அதிகம். அதிலும் கல்வியில் சிறந்த தமிழ் தலைவர்களை பிரபாகரன் தேடித் தேடிக் கொல்கிறாரே அவரிற்கு எனது நன்றிகள் என முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே அவர்கள் பாராட்டுப் பத்திரம் வாசித்தாரே . பிரபாகரனின் தமிழ் இனத் துரோகத்திற்கு இதைவிடவா ஒரு பாராட்டுப் பத்திரம் வேண்டும்?

ஒன்று பட்டு இருக்கும் போது தான் ஒரு நாடோ தேசமோ பலம் வாய்ந்து இருக்கின்றது. மதிக்கப் படுகின்றது. அமெரிக்காவின் சூழ்ச்சியால் சிதறிப் போன ரஷ்யா எங்கே? பிரித்தாழும் சூழ்ச்சி கொண்ட வெள்ளையர்களினால் துண்டாககப் பட்ட நாடுகள் எல்லாம் பிரித்துக் கொடுத்த நாடுகளிற்கே அடிமையாகி சிதைந்து போய் இருப்பது உலக வரலாறு. எந்த ஒரு அன்னிய தலையீடும் இன்றி கடுமையான சட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்திவரும் சிங்கப்பூரிலே யாருமே தங்களை இன ரீதியாக அடையாளப் படுத்திக் கொள்வதில்லை. நான் சிங்கப்பூரியன் என பெருமையுடன் சொல்கிறார்கள் , மிகக் கடுமையான சட்ட திட்டங்கள் இல்லாவிட்டாலும் ஜனநாயக மாண்பு கொண்ட இந்திய மக்களோ பல மொழி கலாச்சார வேறுபாடுகளிற்கிடையிலும் நான் இந்தியன் என பெருமைப் படுகிறார்கள் , குடியேற்ற வாசிகளால் உருவாக்கப்பட்ட அமெரிக்க நாட்டவர்கள் கூட நான் ஒரு அமெரிக்கன் என சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுகின்றார்கள். ஆசியாவின் சொர்க்கமாம் எங்கள் அழகிய சின்னஞ் சிறு தீவு மட்டும், பிரிந்து போக வேண்டும் என உங்களில் சிலர் விரும்புவது ஏன்? குழந்தையைப் போன்ற இந்த குட்டி தீவை கண்ணீரிலேயே மிதக்க விட்டு வேடிக்கை பார்க்கத்துடிக்கும் எந்த நாட்டின் சதிக்கு நீங்கள் பின்னணியாக இருக்கின்றீர்கள்? தமிழர்களை இலங்கை இராணுவம் கொல்கின்றது, தமிழச்சிகள் நிர்வாணமாக அலைகிறார்கள் என்றெல்லாம் எத்தனை நாளைக்கு கதை விட்டு காலம் தள்ளப் போகின்றீர்கள் ? ஆரம்ப காலங்களில் இலங்கைத் தமிழர்கள் சிங்கள அரசுகளால் சில சங்கடங்களை சந்தித்தது உண்மை, ஒரு நாட்டின் பெரும்பான்மை மக்களால் சிறுபான்மை இன மக்கள் வழக்கமாகச் சந்திக்கும் சங்கடங்கள் தான் இவை. இதனைத் தொடர்ந்து பேசியோ ஆல்லது அறவழி போராட்டங்கள் மூலமோ சீர்திருத்த முடியும். உரிமைப் போராட்டம் ஆயுத புரட்சியாக மாறியது, அது தான் சரியான பாதையில் உரிமைகளை வென்றெடுக்கும் ஒரு போராட்டமாக மாறியதா என்றால் அதுவும் இல்லை. சர்வதேச சமுகம் என்ற வெள்ளைத் தோல் கும்பலிடம் விலை போன பிரபாகரன் போராட்டத்தையே திசை திருப்பினான். உரிமைப் போர் பயங்கரவாத யுத்தமாக மாறியது. பிரபாகரனை எதிர்த்து குரல் கொடுத்த நல்லவர்கள் எல்லாம் இன மத , மொழி வேறுபாடின்றி கொல்லப்பட்டார்கள். இலங்கை தீவை தொடர்ந்தும் குழப்ப நிலைக்கு உட்படுத்தி சமாதான தூதுவர்கள் என்ற பெயரில் இங்கே கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக்க முயன்ற அன்னிய தீய சக்திகளுக்கு பிரபாகரன் தோள் கொடுத்தார் , பேச்சுவார்த்தை , சமாதானம் என்ற பெயர்களில் காலம் இழுத்தடிக்கப்பட்டது , கொடுரமான ஆயுதங்களை வாங்கிக் குவித்தார். முழு இலங்கையும் பிரபாகரனின் பயங்கரவாதத்திற்கு பலியாகும் ஒரு நிலை தோன்ற ஆரம்பித்தது. இந்த நிலை இந்தியாவிற்கும் குறிப்பாக அண்டை மாநிலமான தமிழகத்திற்கும் பரவியது. இதன் ஒரு முக்கிய விளைவு தான் தமிழகத்தில் நிகழ்ந்த ராஜீவ் காந்தியின் படுகொலை. தீவிர இந்திய எதிர்ப்பாளரும், இலங்கையில் இருக்கும் இந்திய வம்சாவழி தமிழர்களை பல சுடு சொற்களால் அவமானப்படுத்தி மகிழ்ந்தவருமான பிரபாகரனிற்கு தனது பயங்கரவாத செயல்களை தமிழகத்திலும் முன்னெடுத்து செல்ல சில தலைவர்கள் தேவைப்பட்டார்கள்.

நிலையான கொள்கை பிடிப்போ தமிழக மக்களுக்கு நன்மை தரக்கூடிய செயற் திட்டங்களோ இல்லாமல் கட்சி தொடங்கி நடத்தி கொண்டிருந்த வைகோ , நெடுமாறன் , ராமதாசு போன்றவர்கள் பிரபாகரனிடம் விலை போனார்கள். தமிழக மக்களை தேர்தல் களத்திலேயே தனித்து சந்திக்க திராணியில்லாத அதே வேளை கூட்டணி தர்மம் என்ற ஒன்றும் இல்லாமல் ஆதாயம் தேடி அகப்பட்ட பக்கமெல்லாம் தாவிக்குதித்தனர்.

இலங்கைப் பிரச்சினையை இஷ்டம் போல் கிழித்தெறிந்தனர். இன வெறியை ஊட்டி அழகிய எங்கள் தீவை அழித்த பிரபாகரனைப் போல் இவர்களும் இங்கே தமிழக மக்களிடையே இன வெறியை விதைத்து இந்தியாவின் தேசிய ஒருமைப் பாட்டையே கேள்விக் குறியாக மாற்றினார்கள். இதன் ஒரு விளைவு தான் இந்திய இராணுவம் தமிழகத்தில் தாக்கப்பட்ட சம்பவம்.

மக்களிடம் எடுத்துச் சொல்ல சாதனைகள் எதுவுமே இல்லாத இந்த தேசிய விரோதிகள் தமிழ் ஈழம் என்ற ஒற்றைச் சொல்லை மட்டும் நம்பி அரசியல் நடத்தும் இந்த வாய் சவடால் பேர்வழிகளைப் பார்த்து இலங்கைத் தமிழர்களாகிய நாங்கள் சிரிக்கின்றோம் , சிரித்துக் கொண்டே அழுகின்றோம். சில கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் இப்போது முடங்கி கிடக்கும் புலிக் கும்பலும் அதன் தலைவனும் பணய கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் அப்பாவிப் பொது மக்கள் தான் இந்த யுத்தத்திலே கொல்லப் படுகின்றார்கள். இந்த யதார்த்தம் உங்களிற்கு புரியவில்லையா? பிரபாகரன் உண்மையிலேயே தமிழர் நலன் பேணுபவனாக இருந்தால் இந்த அப்பாவி தமிழர்களை முதலில் விடுவிக்கட்டும். பின்னர் இராணுவத்துடன் சண்டை இடட்டும். பயங்கரவாதிகளிடம் சண்டையிட்டுக் கொண்டே அவர்களின் பிடியில் இருக்கும் அப்பாவித் தமிழர்களையும் விடுவிக்க வேண்டிய பொறுப்பு எங்கள் ஜனாதிபதிக்கு இருக்கின்றது . அவர் அதனைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். புலிகளை சரணடையச் சொன்னார் , அவர்கள் கேட்கவில்லை , கால அவகாசம் கொடுத்து அப்பாவித் தமிழர்களை மட்டுமாவது விடுவித்து விடு என்று பணிவுடன் கேட்டார். அதுவும் நடக்கவில்லை. பேடிகளைப் போல் குழந்தைகளையும் , முதியோர்களையும் கவசமாக்கி குண்டு வீசும் பிரபாகரனைக் கொல்லவோ , உயிருடன் பிடிக்கவோ வேறு என்ன தான் வழி ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரனால் இனி எந்தவிதப் பிரியோசனமும் இல்லை என்பதை புரிந்து கொண்ட சர்வதேச சமுகம் கூட சரணடையுங்கள் அல்லது அப்பாவி மக்களை விட்டு விடுங்கள் என்று தானே புலிகளிடம் கேட்கிறது. பொதுமக்களின் இழப்பு குறித்து அவதானமாக செயற்படுங்கள் என பணிவுடன் இலங்கை அரசைக் கேட்கலாமே தவிர யுத்தத்தை நிறுத்து என அதிகார ஆணையிட எந்த ஒரு நாட்டிற்கும் உரிமையில்லை. ஏனெனில் பிரபாகரன் ஒரு விடுதலைப் போராளி அல்ல Inter ball பொலிசாரால் தேடப்படும் ஒரு உலகக் கிரிமினல் குற்றவாளி.

பம்பாய் ஒபரோ ஹோட்டலில் முஸ்லிம் தீவிரவாதிகள் முற்றுகையிட்டு அங்கிருந்தவர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்த போது இந்திய வீரர்கள் பணய கைதிகளிற்கு பெருமளவு பாதிப்பின்றி ஹோட்டலை மீட்கவில்லையா? அது தான் இன்று முல்லைத் தீவிலே நடக்கின்றது. ஆனால் ஒரு வித்தியாசம் , பிரபாகரன் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பது தன் சொந்த இன மக்களை, சுட்டுக் கொல்வது தப்பியோட முயலும் தன் சொந்த சகோதரர்களை. உலக மக்களிடம் குறிப்பாகத் தமிழக மக்களிடம் அனுதாபம் பெற வேண்டி தன்னால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்களை இராணுவம் கொன்றது எனப் படம் காட்டி , தான் தப்ப வழி தேடும் பிரபாகரனும் அந்த தமிழ் பிணங்களைக் காட்டி அதன் மேல் ஆட்சி அமைக்கத் துடிக்கம் ராமதாசு , வை.கோ , நெடுமாறன் (தற்காலிகமாக ஜெ.) , சீமான் போன்ற தமிழினத் துரோகிகளும் ஒட்டு மொத்த உலகத் தமிழ் சமுகத்தால் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்கள். ( அந்த நாள் வெகு தொலைவில் இல்லை)

பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை துணிந்து எடுத்த யுத்தத்தின் வெற்றி தான் இன்று தலிபான்களுக்கு எதிராக பாகிஸ்தான் போர் தொடுக்கவும் காரணமாக இருக்கின்றது. இனி உலகெமெங்கும் பயங்கரவாதம் தோற்றுப் போகும். அது எந்த வடிவில் வந்தாலும் அழிக்கப்படும். சமத்துவமும் நீதியும் நிறைந்த புதியதோர் உலகம் படைக்கப்படும். அங்கே அகதிகள் இருக்கமாட்டார்கள். அன்பு மட்டுமே இருக்கும்.

## புதியதோர் உலகம் செய்வோம்
## கெட்ட போரிடும் மனிதரை வேரோடு சாய்ப்போம்

***குமுதம் பத்திரிக்கைக்காக 13.05.2009 இல் திரு . தளவாய்சுந்தரத்திடம் நேரிடையாகக் கொடுக்கப்பட்டது. இவர் இலங்கைப் பிரச்சினை பற்றி குமுதத்தில் வெளிவரும் செய்திகட்கு பொறுப்பானவர். இந்த கட்டுரையையும் நேர் காணலையும் பிரசுரிப்பதற்காக தயார் படுத்தப் பட்டு" layout" வேலைகளும் முடிவுற்ற போதும் புலம் பெயர் தமிழர்களின் அழுத்தத்தால் இது பிரசுரமாகவில்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குமுதத்துடன் ஒரு பேட்டி

*குமுதம் ஆசிரியர் குழுமத்தைச் சேர்ந்த திரு . தளவாய் சுந்தரத்துக்கு 30.05.2009 இல் நான் வழங்கிய செவ்வி.*

**Attn** : திரு . தளவாய் சுந்தரம்

கேள்வி : வடக்கு கிழக்கில் சிங்கள திணிப்பு ஏற்படுமா?

பதில் : தற்போது சிங்கள பாடசாலைகளில் தமிழை ஒரு கட்டாய பாடமாக மாற்றியிருக்கின்றது இலங்கை அரசு . சிங்கள மக்கள் இதைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டதுடன் சிங்கள மாணவர்கள் தமிழை ஆர்வமுடன் கற்று வருகின்றார்கள். இரண்டு இனங்களிற்கிடையேயும் ஒரு புரிந்துணர்வு ஏற்பட மொழி அறிவு அவசியம். இதே திட்டத்தை நாளை தமிழ் பாடசாலைகளில் அறிமுகப் படுத்தும் போது கட்டாயமாக "இன உணர்வாளர்கள்"இதை எதிர்ப்பார்கள். மொழி திணிப்பென அலறுவார்கள். தமிழகத்தில் Hindi அறிமுகப் படுத்தப் பட்டபோது திராவிட கட்சிகள் அதனை எதிர்த்தன. ஆதற்காக இன்று வருந்துகின்றன. தமிழகமும் வளர்ச்சியில் பின்தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை இன உணர்வாளர்கள் புரிந்து கொண்டால் சரி.

**கேள்வி : அகதி முகாம்களை பார்வையிட பிரிட்டன் போன்ற நாடுகட்கு இலங்கை அரசு அனுமதி மறுப்பதேன்? என்ற கேள்விக்கு சரியான பதில்**

பதில் : இந்தியாவில் சுனாமி பாதிப்பு ஏற்பட்ட போது அமெரிக்கா உட்பட பல நாடுகள் உதவி செய்ய முன் வந்தன. இந்திய அரசு இதை விரும்பவில்லை. காரணம் இதையே சாக்காக வைத்து இந்த நாடுகள் இங்கே ஒரு தளம் அமைக்க முயலும். இதே போல் அகதி முகாம்களை பார்வையிட விரும்பும் நாடுகள் புலி ஆதரவு கொள்கை உடையவை. மனிதாபிமானம், மனித உரிமை மீறல் என்ற போர்வையில் நுளைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலும் இந்த நாடுகள் அரசிற் கெதிராக பொய் பிரசாரத்தை மேற் கொள்ள முயலும். ஏதோ ஒரு வகையில் மீண்டும் (N.G.O க்களை உருவாக்கி ) அங்கே ஒரு தளம் அமைக்கக் கூடும். இப்படியான சர்வதேச சிக்கல்களை தடுக்கவே அனுமதி மறுக்கப் பட்டிருக்கின்றது.

**கேள்வி : அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு இனி என்ன நடக்கும்?**

பதில் : அந்த மக்களுடன் புலிகளும் கலந்திருக்கின்றார்கள்.(இன்று (30.05.2009)பெண்களின் அரசியல் பிரிவு தலைவர் தமிழினி, அகதிகள் முகாமில் கைது செய்யக்கபப்டதாக செய்தி வந்திருக்கின்றது.) இவர்களை மக்களிடம் இருந்து களைந்த பின் இந்த மக்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். உளவியல் ரீதியாக இவர்கள் பாதிக்கப் பட்டிருப்பதால் தகுந்த உளவியல் சிகிச்சைகள் அளிக்கப்பட்ட பின்பே தாங்கள் விரும்பிய இடங்களிற்கு இவர்கள் குடியமர்த்தப் படுவார்கள். இதற்கு சிறிது காலம் எடுக்கும். அது வரை அகதி முகாம்களில் இலங்கை அரசால் இவர்கள் பராமரிக்கப் படுவார்கள்.

**கேள்வி : இனங் காணப்பட்ட புலிகளின் கதி என்ன?**

பதில் : இவர்கள் ஒரு பயங்கரவாத தலைமையினால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள். குற்றங்களின் அடிப்படையில் இவர்கள் தண்டனை பெறலாம், அல்லது மனிதாபிமான அடிப்படையில் மனநல சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்ட பின்பு சக மனிதர்களுடன் கலந்து வாழ அனுமதிக்கப் படலாம். எப்படியாயினும் இவர்களைப் பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் இலங்கை ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வை.கோவிடம் பத்து கேள்விகள்

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளை கல்லறை பூமியாக்கி தமிழ் இனத்தின் அழிவுக்கு காரணமாக விளங்கும் புலிப் பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை அரசு நடத்தும் யுத்தத்தை இன அழிப்பு போர் என திரிவு படுத்தி அரசியல் நடத்தும் வை.கோ.எனற பொய் . கோவிடம் பத்து கேள்விகள் கேட்கிறான் ஒரு அப்பாவி இலங்கைத் தமிழன்.

01 தமிழ் தமிழ் என கண்கள் சிவக்க நரம்புகள் புடைக்க மேடைகளில் ஊளையிடும் நீங்கள் வீட்டில் பேசும் மொழி தெலுங்காமே? இது உண்மையா ஐயா? வியாபாரத்துககு தமிழ் , விருப்பத்துக்கு தெலுங்கா?

02 அரசியலில் ஒரு நிரந்தர முகவரி இல்லாமல் நாளொரு கட்சி பொழுதொரு தலைமை என சர்கஸ் கோமாளியைப் போல் தாவிக் கொண்டே இருக்கும் நீங்கள் உங்கள் தமிழ் வியாபாரத்தை முன்னிலைப் படுத்தி தனிக் கட்சியாக தமிழக மக்களை தேர்தல் களத்திலே சந்தித்து இருக்கின்றீர்களா? இல்லை சந்திக்கத் தான் தயாரா?

03 தமிழக முதல்வராக இருக்கக் கூட தகுதி அற்றவர் ஜெயலலிதா எனவும் அவரின் ஆட்சியைக் கவிழ்ப்பேன் எனவும் நடைப்பயணம் செய்தவர் நீங்கள். இன்றோ பிரதமர் ஆகும் தகுதி ஜெயாவுக்கு உண்டென பிதற்றுகின்றீர்கள். கேவலம் ஒரு நான்கு சீட்டுக்களுக்காக உங்கள் நாக்கு எப்படியெல்லாம் புரள்கிறது. ஜெயால் ஜெயிலிற்கு போன போது ஓடோடி வந்து பார்த்தாரே கலைஞர்! உடனே மனம் உருகிப் போய் இனி வாழ் நாளில் கலைஞரை எதிர்க்க மாட்டேன் என் றெல்லாம் அறிக்கை விட்டீர்களே! இப்படியெல்லாம் புரட்டிப் புரட்டிப் பேசம் வை. கோ என்ற பொய். கோவே உங்களை நாங்கள் எப்படித்தான் நம்புவது?

04 அரசியல் நாகரிகம் தான் உங்களிடம் இல்லை சாதாரண மனித நேயம் கூடவா செத்து விட்டது? (உண்மையிலேயே ஜெ உங்களிற்கு சரியான ஜோடி தான்.) கடுமையாக நீங்கள் அவரை எதிர்த்த போதும், உங்களைப் பார்க்க ஜெயிலிற்கு ஓடோடி வந்த கலைஞரின் உயரிய மனித நேயம் எங்கே? கலைஞரை சென்று பார்க்கத் தான் உங்கள் எஜமானி உங்களை அனுமதிக்க மாட்டார் கள்.குறைந்த பட்சம் ஒரு அனுதாபம் தெரிவிக்கக் கூட விடமாட்டார்களா? சீ!சேலையின் பின்னால் ஒளிந்து கொண்டு இப்படி ஒரு அரசியல் பிழைப்பு நடத்தும் நீங்களா தமிழின வீரத்தைப் பற்றிப் பேசுவது? நாகரிகம், பண்பாடு , மனித நேயம் எதுவுமே இல்லாத நீங்கள் உண்மையிலேயே தமிழனா சொல்லுங்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 பிரபாகரனை உயிருடன் பிடித்து இந்தியாவிற்கு கொண்டு வர வேண்டுமென சட்ட மன்றத்திலே தீர்மானம் போட்டவர் ஜெ போரிலே அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நியாயப் படுத்தியவர் ஜெ. ஆனால் இன்றோ தனி ஈழம் எனப் பிதற்றுகின்றார்.தமிழ் , தமிழீழம் என்ற வார்த்தைகளை மட்டும் நம்பியே அரசியல் பிழைப்பு நடத்துபவன் நான்.

நீங்களும் அதைச் சொன்னால் தான் பிழைப்பு ஓரளவாவது நடக்கும் ஏனென்றால் மக்களிடம் எடுத்துச் சொல்ல சாதனைகள் எதுவுமே இல்லை என ஜெயிற்கு நீங்கள் ஓதிய மந்திரம் தான் ஜெயின் இந்த மன மாற்றத்திற்கு காரணம் என தமிழக மக்கள் சந்தி தோறும் சிரிக்கின்றாகளே! இது உண்மை தானே.

06 அப்பாவி மக்களிற்காக யுத்தத்தை கைவிடுமாறு இலங்கை அரசிடம் முறையிடும் நீங்கள் அந்த அப்பாவி மக்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் பிரபாகரனிடம் அவர்களை விடுவிக்கச் சொல்லலாமே? பிரபாகரன் பிடிபட்டால் உங்கள் பிழைப்பு முடிந்து விடும் என்ற அற்ப காரணத்திற்காக தானே எங்களின் உயிருடன் விளையாடிக் கொண்டே வருகின்றீர்கள்.செத்து விழும் தமிழ் பிணங்களின் மேல் அரசியல் கூத்தாடும் உங்களை பிணம் தின்னி என நாங்கள் சொல்கின்றோம் இதை மறுக்க முடியுமா?

07 பகவத்சிங் , சுபாஷ் சந்திரபோஸ் என்ற உன்னதமான இந்திய சுதந்திர வீரர்களுடன் பிரபாகரனை ஒப்பிட்டு பேசுகின்றீர்களே . இவர்கள் தமது இன மக்களை அழித்து இருக்கிறார்களா? சகோதர யுத்தம் தான் நடத்தி இருக்கின்றார்களா? பிரபாகரனை ஹிட்லருடன் கூட ஒப்பிட முடியாது ஏன் என்றால் ஹிட்லர் தன் இன மக்களை கொன்றது இல்லை. ஆனால் பாசிச வெறி பிடித்த தான் மட்டுமே தலைவராக இருக்க வேண்டுமென்ற சர்வாதிகார தன்மையில் சகோதர யுத்தத்தையே பிரதானமாக நடத்திய பிரபாகரனா உங்களுக்கு சுதந்திர வீரனாக தென்படுகின்றான்? உங்கள் வார்த்தைகள் உங்களிற்கே கேவலமாக தென்பட வில்லையா?

08. முல்லைத் தீவிலே இருக்கும் மக்களுக்காக மூக்கால் அழும் நீங்கள் தமிழக மண்ணிலே அகதி முகாமில் இருக்கும் ஈழத் தமிழர் நலன் பற்றி என்றாவது சிந்தித்தது உண்டா ? அவர்களின் எதிர் காலத்திற்காக ஏதாவது திட்டமிட்டது உண்டா? குறைந்த பட்சம் அகதி முகாம்களிற்கு போயாவது அவர்களைப் பார்த்து இருக்கின்றீர்களா? உங்களின் பொய் முகம் எமக்கு தெளிவாக விளங்கி விட்டது.எரியும் நெருப்பிலே எண்ணை ஊற்றியது போல் பயங்கரவாத தீயை இலங்கையில் கொழுந்து விட்டு எரியச் செய்து அதிலே குளிர் காயத் துடிக்கும் குள்ள நரி நீங்கள் உங்களை தமிழினத் துரோகி என நாங்கள் சொல்கின்றோம் . இதை உங்களால் மறுக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 . அய்யா! தமிழின தலைவலியே ! உங்கள் நெஞ்சை தொட்டு சொல்லுங்கள் தமிழை ஒரு வியாபாரப் பொருளாக்கி விற்றுக் கொண்டு இருப்பதைத் தவிர இலங்கைத் தமிழருக்கோ அல்லது தமிழக மக்களுக்கோ உங்களால் ஒரு சிறு நன்மையாவது ஏற்பட்டு இருக்கின்றதா? உங்களிற்கு பணமும், பதவியும், புகழும் தேவையென்றால், தமிழக மக்களிற்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. அதைக் கையில் எடுங்கள் பிழைப்பு நடத்துங்கள். தயவு செய்து எங்களை விட்டு விடுங்கள் இனிமேலாவது நாங்கள் நிம்மதியாக வாழ விரும்புகின்றோம். தயவு செய்து எங்களை விட்டு விலகுவிர்களா அய்யா!

10 பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை ஜனாதிபதி துணிந்து எடுத்த யுத்தத்தின் வெற்றிகரமான முடிவைப் பார்த்து தான் இன்று பாகிஸ்தானில் தலிபான்கள் என்ற பயங்கரவாதிகளும் கொல்லப் படுகின்றார்கள். இனி உலகெங்கும் பயங்கரவாதம் ஒழிக்கப்படும். **புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் மனிதரை வேரொடு சாய்ப்போம்** என்ற கவிஞரின் வரிகள் சத்தியமாக்கப் படும். மதிப்பிற்குரிய ராகுல் காந்தி சொன்னது போல் ஜனநாயக வடிவில் எங்கள் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்கின்றோம்.பயங்கரவாதத்தின் ஊது குழலே ! ஒரு ஈழத் தமிழனாக உங்களது தமிழக மண்ணிலிருந்து நான் எழுப்பிய பத்து கேள்விகள் இவை! பதில் சொல்லும் நேர்மை உங்களிடம் இருக்கின்றதா என்று சொல்லுங்கள்.?

குறிப்பு :- **இலங்கையில் பயங்கரவாதத்திற்கு (புலிகள்) எதிரான போர் மிகத் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் ( FEB - MAy - 2009) நான் வை.கோபால்சாமி என்ற அரசியல் கோமாளியிடம் எழுப்பிய கேள்விகள் இவை. மிகுந்த பிரயாசையின் பின் 13.05.2009 தினமலர் நாளிதளில் வை . கோவிடம் 6 கேள்விகள் என தலைப்பிட்டு இது பிரசுரமானது (நான்கு கேள்விகள் தவிர்க்கப்பட்டிருந்தன பாதுகாப்பு கருதி நான் கொழும்பில் இருப்பதாக தினமலர் குறிப்பிட்டிருந்தது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது உங்கள் இடம்

## செம கில்லாடிங்கப்பா...

**ஆ.மோகன், அமராவதி புதூரிலிருந்து எழுதுகிறார்:** ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதாகக் கூறி, தங்களை தமிழ் உணர்வு உள்ளவர்களாக காட்டிக் கொள்வதற்காக, தற்போது சோனியாவை எதிர்த்து போராட்டம் நடத்தி வரும் திரையுலகத்தினரை நினைத்தால், புல்லரிக்கிறது. அடேங்கப்பா... என்ன ஒரு தமிழ் உணர்வு.

இலங்கையில் போர் நடந்து, தமிழர்கள் கொத்து கொத்தாய் மடிவதற்கு, சோனியா மட்டும் தான் காரணம் என்பது போலவும், சோனியாவையே தன் கையில் வைத்திருக்கும் தமிழக அரசுக்கோ, தமிழக முதல்வருக்கோ இதில் எந்த ஒரு பங்கும் இல்லை என்பது போலவும், இவர்கள் ஒருதலை பட்சமாக எதிர்ப்பைக் காட்டுகின்றனர்.

அட சோனமுத்தா... இது கூடவா தெரியாது... யார் தமிழகத்தின் முதல்வராக வந்தாலும், அவருக்கு பாராட்டு விழா நடத்தி, அவரை அப்படியே அமுக்கி, தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது திரையுலகத்தினரின் வழக்கம்.

ஆளும் கட்சியை, அவர்கள் எந்தக் காலத்திலும் பகைத்துக் கொள்வதில்லை; கொண்டதும் இல்லை. அதனால் தான், சென்ற வருடம் விஜயகாந்தை தவிர, மற்ற அனைத்து நடிகர்களுக்கும், கலைமாமணி பட்டத்திலிருந்து, சிறந்த நடிகர் பட்டம் வரை வாரி வழங்கியாகி விட்டது.

சோனியாவை பகைத்துக் கொள்வதினால், பெரிதாக நஷ்டம் வந்துவிடப் போவதில்லை; என்ன... தேசிய விருது கிடைக்காது; அது கிடக்குது புடலங்காய். நம்ம ஊரில், நம்ம பொழப்பு ஓட வேண்டாமா? அதுக்கு நம்ம ஊர் அரசியல்வாதிகளை பகைத்துக் கொள்ள முடியுமா என்ன? செம கில்லாடிங்கப்பா நம்ம ஆளுங்க.

பல பேருக்கும் நடிப்பு சொல்லிக் கொடுக்கும் இவர்களுக்கு, நடிக்க சொல்லியா கொடுக்க வேண்டும்? ஏதோ அரசியல்வாதிகளைப் போல் இவர்களும், யாரை எதிர்த்தால் தங்கள் பிழைப்பில் மண் விழாதோ, அவர்களை மட்டும் எதிர்க்க கற்றுக்கொண்டு விட்டனர்; பிழைத்துக் கொள்வர்!

அடுத்தமுறை இவர்களுக்கோ, அல்லது இவர்களின் படங்களுக்கோ, விருதுகள், சலுகைகள் மாநில அரசில் கண்டிப்பாக உண்டு.

●●●

## வைகோவிடம் 6 கேள்விகள்!

**எ.ரவிக்குமார், கொழும்பிலிருந்து அனுப்பிய இ-மெயில் கடிதம்:** 30 ஆண்டுகளாக எந்த ஒரு தீர்வையும் ஏற்படுத்த முடியாமல், தமிழர் வாழும் பிரதேசங்கள் கல்லறையாகி வரும் நிலையில், தமிழ் இன அழிப்பு என்ற போர்வையில், தங் கள் சுயலாபத்திற்காக சில அரசியல் தலைவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

அமைதியான இலங்கையை காணத் துடிக்கும் இலங்கைத் தமிழன் எழுப்பும் அர்த்தமான ஆறு கேள்விகள்!

1. தமிழ், தமிழ் என கண்கள் சிவக்க, நரம்புகள் புடைக்க மேடைகளில் முழங்கும் நீங்கள், வீட்டிலே தெலுங்கு பேசுவது ஏன் ஐயா?

2. உங்கள் தமிழ்ப் பற்றை முன்னிலைப் படுத்தி, கூட்டணி இல்லாமல் தமிழக மக்களை தேர்தல் களத்தில் சந்திக்கத் தயாரா?

3. ஜெயலலிதாவின் ஆட்சியை கவிழ்ப்பேன் என சபதம் செய்து, நடைபயணம், பிறகு அவருடன் அரசியல் கூட்டு; கலைஞர் எனக்கு எதிராக சதி செய்கிறார் என கதறல்; பிறகு அவருடன் கூட்டு! எதைப் பேசுகிறோம், எதை செய்கிறோம் என எதுவும் புரியாமல் இருக்கும் உங்களுக்கு வந்திருக்கும் வியாதி தான் என்ன ஐயா?

4. பிரபாகரனை தலைவர் என்கிறீர்கள்; புலி அழிவை இன அழிவு என்கிறீர்கள்; பிரபாகரனுக்கு எதாவது நடந்தால் தமிழகத்தில் ரத்த ஆறு ஓடும் என்கிறீர்கள்; ஆனால், நீங்கள் கூட்டு வைத்திருக்கும் எதிர்க் கட்சித் தலைவரோ, பிரபாகரனை கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுகிறார். அவரை எதிர்த்து நீங்கள் எதுவுமே சொல்வதில்லையே ஏன் ஐயா?

5. மக்களுக்காக யுத்தத்தைக் கைவிடுமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை வைக்கும் நீங்கள், அதே மக்களுக்காக யுத்தத்தை நிறுத்தி, அவர்களை யுத்தமற்ற பாதுகாப்பு பிரதேசத் துக்கு செல்லவிடுமாறு புலித்தலைவரிடம் கேட்கலாமே!

6. தமிழக மண்ணிலே அகதி முகாம்களில் மிக கஷ்ட ஜீவனம் நடத்தி வருகின்றனரே, அந்த இலங்கைத் தமிழர்களிடம் குறைகளை கேட்டதுண்டா? அவர்களுக்கு இதுவரை நீங்கள் செய்தது தான் என்ன?

●●●

## போதும் அந்தர் பல்டி!

**கே.பி.ஆர்.கோவிந்தராஜ், சென்னையிலிருந்து எழுதுகிறார்:** ராமதாசின் அந்தர் பல்டி, பொதுமக் களிடம் மட்டுமின்றி, அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முடிஞ்சு போச்சு

புலி பிசினசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிஞ்சு போச்சு புலி பிசினசு

இராணுவ ரீதியாக புலிகள் முற்றாக தோற்கடிக்கப் பட்டு விட்டார்கள். இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் புலி ஆதரவாளர்களை தேர்தல் களத்தில் படு தோல்வியடையச் செய்ததன் மூலம் ஜனநாயக ரீதியில் தமிழக மக்கள் புலி எதிர்ப்பை வெளிப்படுத்தி விட்டார்கள். இராணுவ மற்றும் ஜனநாயக ரீதியில் புலிகள் சந்தித்த இந்த மாபெரும் தோல்வி உலக பயங்கர வாதத்திற்கு ஒரு எச்சரிக்கை.

சிறு வயதில் கிளித்தட்டு விளையாடும் போது தான் தோற்கும் நிலை ஏற்பட்டால் கோடுகளை அழித்து , சக தோழர்களையும் அடித்து தோல்வியை தாங்காமல் அழுது கொண்டே இருப்பாராம் பிரபாகரன். இவரின் இந்த இயல்பு தான் புலிகள் உட்பட இலட்சக் கணக்கான தமிழ் மக்களின் அழிவுக்குக் காரணமாக அமைந்து விட்டது. எல்லாமே முடிந்த பின் மக்களிற்காக யுத்தத்தை நிறுத்தி விட்டோம் என்பதும்; ஆயுதங்களை சர்வதேச சமுகத்திடம் ஒப்படைக்கத் தயார் என்பதும் நகைப்புக்கும் வேதனைக்கும் உரிய விடயமல்லவா! சுர்வதேச நாடுகளின் தலையீடு இன்றி அன்றே தோல்வியை நேர்மையுடன் ஒத்துக் கொண்டு இலங்கை ஜனாதிபதியுடன் நேரடிப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்தால் சுமூகமான விளைவு நிச்சயம் ஏற்பட்டிருக்கும்.

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய சர்வதேச சமுகத்திடம் விலை போய்; சமாதானப் பேச்சு வார்த்தை என்ற பெயரில் மிக நீண்ட காலத்தை இழுத்தடித்து முடிவுக்கு வராத யுத்தம் ஒன்றை ஏற்படுத்தவே புலித்தலைமை விரும்பியது. இதன் மூலம் தமிழர் வாழும் பகுதிகளில் சர்வதேச சமுகத்தை நிரந்தரமாகக் குடியேற்றி இலங்கைக்கும், இந்தியாவின் பிராந்திய நலனிற்கும் தொடர்ச்சியான ஒரு பயங்கரவாத அச்சுறுத்தலை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கம். சுமார் 500 வருடங்களிற்கு முன்னர் வாழ்ந்த நாஸ்டோடாமா என்ற பிரெஞ்சு ஞானி, ஒரு சிறு தீவை மையமாக வைத்து 3ஆவது உலக யுத்தம் ஆரம்பமாகும், என கூறியதாகச் சொல்வார்கள். புலி பயங்கரவாதம் முடிவுக்கு வராமல் இருந்திருந்தால் ஒரு வேளை இது உண்மையாகிப் போயிருக்கும்.

எது எப்படியோ , ஈழத்தமிழர்களின் அவலத்திற்கெல்லாம் முக்கிய காரணம் புலிகளே என்பதை புலி ஆதரவாளர்கள் இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும். தங்கள் சொகுசு வாழ்க்கை தொடர வேண்டும் என்பதற்காக புலிகளை ஆதரித்த புலம் பெயர் தமிழர்களும் , பிழைப்புக்காக புலிகளை ஆதரித்த சில தமிழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வாதிகள் மற்றும் சீமான் , பாரதிராஜா போன்ற சினிமா காரர்களும் இந்த பிழைப்பை கைவிட்டு தங்களின் தொழிலை மட்டும் கவனிப்பதே ஈழத் தமிழர்களிற்கு இவர்கள் ஆற்றும் மிகப் பெரிய கைமாறு. புலி பிசினசில் காலம் தள்ளிய இவர்கள் தமிழக மக்கள் மௌனமாகக் காட்டிய ஜனநாயக தீர்ப்பிற்கு மதிப்பளித்து நடந்து கொள்வது புத்திசாலித் தனமானது.

அமெரிக்கா , பிரிட்டன் போன்ற நாடுகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிட வேண்டும் என நெடுமாறன் போராட்டம் நடத்த இருப்பதாக அறிவித்து இருப்பது சர்வதேச சமுகத்திடம் மீண்டும் ஈழத் தமிழர்களை சிக்க வைக்கும் ஒரு சதி முயற்சி. எங்களிற்கு பிரச்சினையே இல்லை எல்லாமே முடிந்து விட்டது என நாங்கள் சொன்ன பின்பும் பிரச்சினை இருப்பதாக சொல்லி மீண்டும் மீண்டும் எரியும் நெருப்பில் எங்களை ஏன் தள்ளுகின்றீர்கள் ? தயவு செய்து எங்களை விட்டு விடுங்கள். சுதந்திரக் காற்றை இனியாவது நாங்கள் சுவாசிக்க வேண்டும்.

குறிப்பு - **தினமலர் வாரமலரிற்கு வாசகர் கடிதம் பகுதிக்கு மே 2009 ல் அனுப்பப் பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி அழிப்பும் தமிழகத்தில் அதன் விளைவுகளும்

*(தமிழகத்தில் இருந்து ஒரு நேரடி பார்வை)*

முப்பது வருட காலமாக ஐக்கிய இலங்கைக்கு மட்டுமல்ல , முழு தெற்காசியாவிற்கும் அச்சுறுத்தலாக விளங்கிய புலிகள் முற்றாக மரணித்து விட்டார்கள். புலிகளின் வளர்ச்சியில் இந்தியா – குறிப்பாக தமிழகத்துக்கு பெரும் பங்கு உண்டு. புலித் தலைவர் பிரபாகரனின் காதல் திருமணமும் தமிழகத்தில் தான் நடந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் இன உணர்வின் அடிப்படையில் புலிகளிடம் தமிழகம் காட்டிய பாசத்தை சுயநலம் மிக்க புலிகள் தங்கள் வளர்ச்சிக்கு மட்டுமே பயன் படுத்திக் கொண்டார்கள். பிச்சைக்காரர்களாகவும்,கொள்ளைக் காரர்களாகவும் இருந்த போது இந்தியாவின் உதவியுடன் வளர்ந்து வந்த புலிகள் வளர்ச்சி பெற்ற பின்பு : பணக்கார மேலைத் தேச நாடுகளின் விசுவாசிகளாக மாறினார்கள். இவர்களின் பணத்துக்கும் , பகட்டுக்கும் விலை போன இவர்கள் தீவிர இந்திய எதிர்ப்பாளராக மாறினார்கள். இந்த நாடுகளின் கட்டளைப்படி இந்திய மக்களின் தலைவர் ராஜிவ் காந்தியை படுகொலை செய்தார்கள். அதையும் தமிழக மண்ணில் நடத்தியதன் மூலம் தமிழகத்திற்கு ஒரு கரும்புள்ளியை ஏற்படுத்தினார்கள்.

புலிப் பணத்தில் கட்சி நடத்தும் சில தமிழக அரசியல் வாதிகள் மற்றும் சினிமா பிரபலங்களின் உதவியுடன் தமிழக மண்ணிலும் தங்கள் பயங்கரவாத செயல்களை நடத்த புலிகள் திட்டமிட்டு இருந்தார்கள். இலங்கை மண்ணில் பிரிவினை ஏற்படும் அதேவேளை தமிழகத்தையும் இந்தியாவில் இருந்து பிரிப்பதே இவர்களின் சதித்திட்டம். பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் உலக நாடுகளை அடிமைப் படுத்த துடிக்கும் மேற்கத்திய நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களே உண்மையில் புலிகளின் எஜமான்கள்.

புலிகளின் இந்த கபட நாடகத்தையும், இன உணர்வு என்ற போர்வையில் ஒட்டு மொத்த தமிழ் சமுகத்தையும் வெள்ளைக்காரர்களிற்கு அடிமையாக்க நினைக்கும் தமிழின விரோதப் போக்கையும் இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல : தமிழக மக்களும் நன்றாகவே புரிந்து கொண்டார்கள். அதனால் தான் இலங்கை மண்ணிலே புலிகள் இராணுவ ரீதியில் முற்றாக அழிக்கப்பட்ட அதே வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக மண்ணிலே புலி ஆதரவு கட்சிகளை தமிழக மக்கள் ஜனநாயக ரீதியில் படு தோல்வியடைய செய்தார்கள்.

புலிகளால் பணக்கார நாடுகட்கு குடிபெயர்ந்து அங்கே சொகுசு வாழ்க்கை வாழும் புலம் பெயர் தமிழர்களையும், புலிப் பணத்தில் அரசியல் பிளைப்பு நடத்தி வந்த சில தமிழக அரசியல் கோமாளிகளையும் தவிர புலிகளுக்கு ஆதரவாக குரல் எழுப்ப இன்று எந்த தமிழர்களும் தயாராக இல்லை. பிரபாகரன் மீது கை வைத்தால் தமிழகம் கொந்தளிக்கும், இரத்த ஆறு ஓடும் என்றெல்லாம் மிரட்டிய வை.கோ , நெடுமாறன் போன்றவர்கள் கூவம் ஆறு தன்னும் பொங்காத அமைதியைப் பார்த்து வெட்கிப் போனார்கள்."விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை"என்ற பழைய கதையைப் போல் பிரபாகரன் சாகவில்லை அதனால் தான் ஆறு ஓடவில்லை. என தங்களைத் தாங்களே சமாதானப் படுத்திக் கொள்கிறார்கள். பாவம் ஏதோ வயிற்றுப் பிழைப்பு ! நடத்திவிட்டு போகட்டும்.

துணிவுடனும் நேர்மையுடனும் போராடி புலிகளை முற்றாக அழித் தொழித்த அதிபர் ராஜபக்ஷ அவர்களின் வீரம் தமிழக மக்கள் மனதிலே அவரிற்கு ஒரு பெரிய இடத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அதுவும் ராஜீவ் காந்தி கொல்லப் பட்ட அதே மாதத்தில் சில நாட்கட்கு முன் பிரபாகரன் கொல்லப் பட்ட அதிசயம் தமிழக மக்களின் காயம் பட்ட நெஞ்சுக்கு மருந்தாக அமைந்து விட்டது. இதனால் தான் மாண்பு மிகு ஜனாதிபதி ராஜபக்ஷ வை "தெய்வமே"என்று அழைத்து தமிழகமெங்கும் பெருமளவில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன (படம் இணைப்பு)

புலிகளின் ஒழிப்பு, பிரபாகரன் மரணம் பற்றி சாதாரண, தமிழர்கள்,பிரபல்யங்கள் மற்றும் தமிழ் ஊடகங்கள் தெரிவித்த சில கருத்துக்களும் / கார்ட்டூன் படங்கள்.

1. பா.பொற்கோ - (மதுரை தினமலர் 19/05/2009) பிரபாகரனின் போராட்டம் தோல் வியைத் தழுவி விட்டது. இதன் காரணமே பிரபாகரனின் சர்வாதிகார சிந்தனை , சொல் , செயல் என்பதை அவர் உணராதது தான்.

2. சரவணன் (ஹோட்டல் தொழிலாளி) - அப்பாடி சனியன் தொலைஞ்சுது இனி யாச்சும் நீங்க நிம்மதியா இருங்கப்பா.

3. மாரியப்பன் (ஆட்டோ ஓட்டுனர்) - அநியாயமா நம்ப தலைவரை கொன் னுட்டாம்பா கடைசில அதே மாதிரி போட்டான் பார்த்தியா.

4. மத்திய அமைச்சர் இளங்கோவன் (தினமலர் 22.05.2009 - ஸ்ரீபெரும்புத்தூரில்) சொன்னது. - கத்தி எடுத்தவன் கத்தியால் சாவான் . 18 ஆண்டுகட்கு முன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜீவ் கொலைக்கு காரணமானவன் அதே வன்முறையில் கொல்லப் பட்டு வாழ்க்கை முடிவுக்கு வந்தது. உலக தீவிரவாத செயலுக்கு இது எடுத்துக்காட்டு. ஆயுதம் எடுத்தால் வழி பிறக்கும் என்பது உண்மையில்லை.

5. துக்ளக் சோ - (03.06.2009) பிரபாகரனின் மரணம் எப்படி வீரமரணம் என்பது எமக்குப் புரியவில்லை. அப்பாவி மக்களை தனக்குப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு , அவர்கள் மத்தியில் தான் , பாதுகாப்பாக இருந்து கொண்டு , இலங்கை இராணுத்திடம் இருந்து தப்பிக்க வழி தேடிய பிரபாகரனின் மரணம் எப்படி வீரமரணமாகும்?

6. அருளர் - (ஈரோஸ் இயக்கத் தலைவர்களில் ஒருவர்10.06.2009 ல் ) த சண்டே இந்தியனுக்குச் சொன்னவை .

தமிழீழத் திட்டம் அறிவியல் பாதையில் தேவையற்றது மட்டுமல்ல இதை ஒரு தற்கொலை முயற்சியாகவும் நான் கருதுகின்றேன். இந்தப் போரால் நடந்திருக்கும் பலன் ஏதாவது உண்டென்றால் தமிழர்கள் கனடா , ஐரோப்பா போன்ற இடங்களிற்கு சென்றது தான்.

7. புலிகளிடையே ஒரு தரப்பினர், பிரபாகரன் இன்னும் சாகவில்லை என்கிறார்கள். பிரபாகரனின் மரணத்தை மர்மமாக வைத்திருப்பதன் மூலம் தனித் தமிழ் ஈழக் கனவிற்கு உத்வேகம் கொடுப்பது தான் இவர்களின் நோக்கமா? ( எஸ் . செந்தில்குமார் India Today க்கு 10.06.2009 ல் எழுதியது.

8. நானும் இலங்கையில் இருக்கும் தமிழர்களிற்கு தனி ஈழம் தான் தீர்வு என்று தீவிரமாக நம்பினேன். ஆதரித்து எழுத்திலும் பேச்சிலும் பிரசாரம் செய்தேன் . இப்போது என் கருத்து மாறிவிட்டது. இன்று உலகில் எங்கேயும் எவரும் பிரிந்து போவதற்கு போராடுவதை விட , சேர்ந்து வாழ்வதற்கான வழிமுறைகளை யோசிப்பதும் உருவாக்குவதும் தான் சிறந்த தீர்வு என்று நம்புகின்றேன். மறுபடியும் ஆயுதப் போராட்டம் ஒரு ரொமாண்டிக் கனவாக இருக்க முடியுமே தவிர , இன்னும் பல தலைமுறை ஈழத் தமிழர்களை யுத்தத்தில் வன்முறையில் பலி கொடுப்பதில் தான் திரும்பவும் முடியும்.(ஞானி 03.06.2009 , குமுதத்தில் எழுதியது.)

9. திரு வேங்கிமலை சரவணன் (குமுதம் - முதன்மை நிருபர் என்னிடம் நேரிடையாகச் சொன்னது ) - அகிம்சை தான் இறுதியில் வெல்லும். இந்திய சுதந்திர போராட்டத்தில் காந்தியின் பெயர் தான் நிலைத்து நிற்கின்றது. நெல்சன் மண்டேலாவைப் பார்த்தாவது தீவிரவாதிகள் திருந்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்களும் , புத்தி ஜீவிகளும் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்துப் பார்க்கும் போது இலங்கை மட்டுமல்ல , இந்தியாவும் புலிகளின் அழிவை அறிவியல் கண்ணோட்டத்துடன் வரவேற்கின்றது என்பது தெளிவாகின்றது.

துப்பாக்கி முனைகளில் மௌனித்து வாழ்ந்த இலங்கை தமிழர்கள் இப்போது தான் உண்மையான விடுதலை அடைந்திருக்கின்றார்கள். இன ஐக்கியம் உயிர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது. இன முரண்பாடு முற்றாக அழிந்து விட்டது . பொருளாதார மேம்பாட்டை துரிதப்படுத்தி ஆசியாவின் சொர்க்கமாக மட்டுமல்ல ; உலகத்தின் சொர்க்கமாகவே இலங்கை மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

குறிப்பு :-

***சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் கடமையாற்றும் திரு . பத்மநாதன் அவர்களிடம் 05.06.2009 இல் அனுமதி பெற்று தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தினகரன் பத்திரிகையின் நிருபரான மாவை அசோகன் என்பவர் மூலமாக தினகரன் பத்திரிகைக்கு அனுப்பப் பட்டது.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராஜீவ் நினைவுநாள் இன்று அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, ராஜீவ் மறைவுக்குக் காரணமான விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அதே மே மாதத்தில் கொல்லப்பட்டதற்கு தெய்வத்திற்கு(!) நன்றி தெரிவித்து, காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் சென்னை நகர் முழுவதும் போஸ்டர் ஒட்டியுள்ளார் இடம் மயிலாப்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்குப் போக்கும் நீசர்களும்

01.07.09 இல் தமிழக சட்ட மன்றத்தில் முதல்வர் கலைஞர் உரையாற்றும் போது புயல் பேச்சு , கடல் அலை பேச்சு , எரிமலை பேச்சு என பட்டங்களுடன் எழுதியும் பேசியும் வரும் சில அரசியல் வாதிகளும், ஊடகங்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நீக்குப் போக்காக நடந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

30 வருட காலமாக பிரிவினை யுத்தம் நடந்த ஒரு நாட்டில் சில மாதங்களுக்குள் இன ஐக்கியத்தை ஏற்படுத்தி விட முடியாது. தமிழர்கள் எல்லோரும் பிரிவினை வாதிகள் அல்ல என்ற எண்ணம் பெரும்பான்மை சிங்களவருக்கு ஏற்பட வேண்டும். தமிழ் சிங்கள இன மக்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும். இலங்கை அரசு "சிங்கள அரசாக" இல்லாமல் தமிழ் முஸ்லீம் சமுகத்தவரையும் பெருமளவில் இணைத்துக் கொண்ட நல்லிணக்க அரசாக மாற வேண்டும். இந்த முன்னேற்றம் இன்று இலங்கையில் நடைபெற்று கொண்டிருக்கின்றது. இந்த வேளையில் தமிழகத்தில் சிலர் சிங்கள சகோதரர்களை காயப் படுத்தும் விதமாக எழுதியும் பேசியும் வருவது இலங்கை தமிழுக்கு (தமிழருக்கு) மீண்டும் சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதைத் தான் கலைஞர் பண்புடன் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்.

எவ்வழி உறைவது உலகம் - அதனுடன்
அவ்வழி உறைவது அறிவு.

தங்களை தமிழ் இன உணர்வாளர்களாக வெளிப்படுத்திக் கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஊதி ஊதி எரிய வைக்கும் நீக்குப் போக்கற்ற இந்த நீசர்களின் இன்னொரு பக்கம் மிகப் பயங்கரமானது. இவர்கள் யார்? என்பதை அறிவியல் ரீதியாக அலசிப்பார்க்கலாம்.

1) வல்லாதிக்க மனப்பான்மையும் பிரித்தாளும் சூழ்ச்சியும் கொண்ட பிரிட்டன் , அமெரிக்கா போன்ற ஐரோப்பிய நாடுகள் ஆசிய நாடுகளின் வெகு வேகமான வளர்ச்சியை விரும்பவில்லை. அதனால் தான் மதம் , இன , மொழி ரீதியில் பிரிவினை வாதத்தை வளர்த்து பயங்கரவாதிகளை உருவாக்கி ஆசிய நாடுகளில் சீர் குலைப்பு வேலைகளில் ஈடுபடுகின்றன.

2) தமிழக தமிழர்களின் உண்மையான தமிழ் உணர்வால் , உதவியால் உருவாக்கப்பட்ட புலிகள் இயக்கம் காலப் போக்கில் பெரும் நிதிக்கு ஆசைப்பட்டு , மேலை நாடுகளின் விசுவாசியாக மாறிப் போனது. பிரபாகரனிற்கு சென்னையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாடகைக்கு எடுத்துக் கொடுத்தது முதல் பல வழிகளிலும் புலிகட்கு உதவிய உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா.சனார்த்தனம் கூட பிரபாகரனின் இந்திய எதிர்ப்பை விமர்சித்து 1980 களில் ஜுனியர் விகடனில் பிரபாகரனிற்கு ஒரு எச்சரிக்கைக் கடிதம் எழுதி இருக்கின்றார்.

3) மேலை நாடுகளின் வேண்டாத உறவால் புலிகளின் போராட்டம் திசைமாறிப் பயங்கரவாதமாக உருவெடுத்தது. ஆசிய நாடுகளிற்கு குறிப்பாக இந்தியாவிற்கு ஒரு அச்சுறுத்தும் சக்தியாக புலிகள் மாற்றப்பட்டார்கள். சிறுவர்களும் பெண்களும் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டு அநியாயமாக சாகடிக்கப்பட்டார்கள். பணக்காரத் தமிழர்களிடம் பணத்தையும் ஏழைகளிடம் உயிரையும் பறித்தெடுத்து புலிகள் தமக்கென ஒரு இராச்சியத்தையும் உருவாக்கினார்கள். புத்தி ஜீவிகள் தேடித் தேடி கொல்லப்பட்டார்கள். "படித்தவர் இருக்கக் கூடாது இருப்பவர் படிக்கக் கூடாது" என்பதே பிரபாகரனின் சிந்தனையாக இருந்தது.

4) இலங்கையைப் போல் இந்தியாவில் தமிழகத்தில் பிரிவினை வாதத்தை உருவாக்க புலிகளும் , மேலை நாடுகளும் சதித்திட்டம் தீட்டின. சில அரசியல் வாதிகளும் பத்திரிகையாளர்களும் பெரும் விலை கொடுத்து வாங்கப்பட்டார்கள். புலி ஆதரவு பிரசாரம் மூலம் தமிழக மக்களிடம் இன வெறியைத் தூண்டி பிரிவினை வாதத்திற்கு வழியமைக்க முடிவு செய்யப்பட்டது. தமிழக மக்கள் உணர்வு பூர்வமானவர்கள் அதே வேளை நுண்ணறிவு கொண்டவர்கள். ராஜீவ் காந்தியின் கொலை, புலிகள் மேல் வெறுப்பையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியதால் எதிர் பார்த்தபடி பிரிவினை வாதிகளால் தமிழகத்தில் வளர முடியவில்லை. ஆனாலும் இவர்களின் பிரசாரம் வளர்ந்து கொண்டு தான் இருந்தது, பின்னணியில் இருந்தது அமெரிக்க டொலர்கள் அல்லவா?

5) இந்த சந்தர்ப்பத்தில் தான் இலங்கையின் ஜனாதிபதியாக மாண்பு மிகு திரு.ராஜபக்ஷ அவர்கள் பதவியேற்றார். இவர் ஜனாதிபதியாகிய பின்பு நடந்த புலிகளின் மாவீரர் தின உரையில் பிரபாகரன் "மகிந்த ஒரு யதார்த்த வாதி" என பாராட்டுப் பத்திரம் வாசித்தார். யதார்த்தத்தை புரிந்து கொண்ட ஜனாதிபதியும் மேற்குலக நாடுகளின் பின்னணியை விலக்கிவிட்டு நேரடிப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு பலமுறை பண்புடன் அழைத்தார். மேலை நாடுகளின் கைப் பொம்மையாக மாறிவிட்ட புலிகளால் இது எப்படிச் சாத்தியப்படும்? எனவே தனது வெள்ளை எஜமானர்களின் ஆலோசனைப்படி சமாதான காலத்திலேயே புலிகள் இலங்கை இராணுவத்தை தாக்க ஆரம்பித்தார்கள். விவசாயத்திற்கு பயன்பட்டு வந்த மாவிலாறு அணையை மூடினார்கள். இலங்கை அரசம் மக்களும் பொறுமை இழந்தார்கள்.

6) யதார்த்த வாதியான ஜனாதிபதி அவர்கள் யுத்தத்தின் மூலம் புலிகளை அழித்திட முடிவு செய்தார். எந்த ஒரு நாட்டின் உதவியும் இன்றி யுத்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் என்னே ஒரு அதிசயம் ! புலிகளின் பயங்கரவாத முகத்தை தெளிவாகப் புரிந்து கொண்ட பல ஆசிய நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு இலங்கைக்கு உதவின. ஜனாதிபதியின் இராஜதந்திரமும் இதற்கு உதவியது.

7) தர்மம் அரசு பக்கம் நின்றதால் புலிகள் படு தோல்வி அடைந்தார்கள். ஆசிய பிராந்தியத்திற்கு ஏற்பட விருந்த ஒரு பெரும் பாதிப்பு இப்பொழுது நீக்கப் பட்டிருக்கின்றது. எப்படியாவது புலிகளைக் காப்பாற்றி விடலாம் என கருதிய மேலை நாடுகள் வாயடைத்துப் போயிருக்கின்றன.

8) அமெரிக்க டொலர்களில் மூழ்கித் திளைத்த தமிழக புலி ஆதரவாளர்களிற்கு இப்பொழுது தான் வேலைப் பளு அதிகமாகி இருக்கின்றது. தங்கள் வெள்ளை எஜமானர்களின் கட்டளைப்படி மிச்சம் மீதியிருக்கும் புலிகளையும் அதன் ஆதரவாளர்களையும் தமிழகத்தில் செயற் பட களம் அமைத்துக் கொடுக்க வேண்டும், பிரபாகரன் பற்றிய செய்திகளை தொடர்ந்து வெளியிட்டு மக்கள் அவரை மறக்காமல் பார்த்துக் கோள்ள வேண்டும். புலி வாலைப் பிடித்த கதையாக தற்போது அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள் இந்த தமிழக புலி ஆதரவாளர்கள்!.

9) மேடைகளில் ஊளையிட்டு அழுவதும் , கண்கள் சிவக்க கத்தியும், பிணங்களின் படத்தைக் காட்டி ஒப்பாரி வைத்தும் , திடீர் ஈழத் தாயை உருவாக்கியும் , கற்பனைக் கெட்டாத கதைகளை உருவாக்கியும் என்னவெல்லாமோ செய்தும் பாவம் ! இவர்களால் தமிழக மக்களைக் கவர முடியவில்லை. இவையெல்லாம் நாடகம் என்பதைத் தமிழக மக்கள் தெளிவாகவே புரிந்து கொண்டு விட்டார்கள்.

10) ஆனாலும் என்ன ? வாங்கிய டொலரிற்கு, வாங்கும் டொலரிற்கு இந்த நீசர்கள் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். பேசிக் கொண்டே இருக்க வேண்டும்........ இல்லையேல் இவர்களின் உயிருமல்லவா பறிக்கப்பட்டு விடும்! இந்த நீசர்களின் எழுத்தும் பேச்சும் நிறுத்தப் பட வேண்டும்.

## இதை இங்கே செய்வது யார்?

இது 01.07.2009 இல் கலைஞர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து தமிழகத்தில் நான் எழுதிய கட்டுரை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞருக்கு பாராட்டு

## கலைஞருக்கு ஒரு மனம் திறந்த மடல்



01.07.2009 இல் முதல்வர் கலைஞர் அவர்கள் சட்ட மன்றத்திலே . இலங்கை தமிழர் பிரச்சினை பற்றி ஆற்றிய உரை இலங்கை தமிழர்களாகிய எம்மையும் சந்தோசப்படுத்தியிருக்கின்றது.

எவ்வழி உறைவது உலகம் - உலகத்தோடு
அவ்வழி உறைவது அறிவு.

என்ற ஐயன் திருவள்ளுவரின் குறளுக்கேற்ப அமைந்திட்ட கலைஞரின் உரை அவரின் அரசியல் புலமைக்கு ஒரு எடுத்துக்காட்டு. கலைஞர் அவர்கள் இலங்கையின் மத்திய அரசை "சிங்கள அரசு" என இன்று குறிப்பிட்டாலும் எதிர் வரும் காலங்களில் "ஐக்கிய மத்திய அரசு" என அதைக் குறிப்பிடுவார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் இன்றைய இலங்கை அரசில் பெருமளவிலான இலங்கைத் தமிழர்கள் விருப்பத்துடன் இணைந்து வருகின்றார்கள். இதுவரை காலமும் புலிகட்கு ஆதரவாக இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி கள் கூட இலங்கை அரசில் இணைந்து வருவது இதற்கு ஒரு ஆதாரம். கலைஞர் அவர்கள் விரும்பியதைப் போல் தமிழரையும் பெருமளவில் இணைத்துக் கொண்டு ஜனாதிபதி மகிந்தவின் தலைமையின் கீழ் ஒரு "மத்திய அரசு" உருவாகும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. பல மொழி பேசுபவர்களைக் கொண்ட இந்திய மத்திய அரசைப் போல் இதுவும் ஐக்கியமான ஒரு இலங்கை மத்திய அரசாக அமைந்து விடும்.

ஒரு சிறிய நாடு பிரிந்து போவது என்பது அறிவியல் ரீதியில் பொருத்தமற்ற விடயம். பிரித்தாளும் சூழ்ச்சி கொண்ட நாடுகளே உலகமெங்கும் பிரிவினையைத் தூண்டி வருகின்றன. நாடுகளை அடிமைப்படுத்தலே இவர்களின் ஒரே எண்ணம். தீரத்துடனும் நேர்மையுடனும் தீவிரவாதத்தை எதிர்த்து நின்றதால் தான் பிரிவினை வாதம் இன்று முறியடிக்கப் பட்டு விட்டது. ஐக்கியமான அமைதியான இலங்கை என்பது, இலங்கைக்கு மட்டுமல்ல முழு ஆசியாவிற்கும் பாதுகாப்பான ஒரு விடயம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இதனால் தான் பிரிவினை வாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா மட்டுமல்ல அனைத்து ஆசிய நாடுகளும் இலங்கைக்கு உறுதுணையாக நின்றன. இதன் மூலம் அமைதியான ஒரு ஆசிய பிராந்தியம் உருவாகி வருகின்றது என்பது மிகப் பெரிய உண்மை.

மீண்டும் ஒரு பிரிவினை வாதம் இலங்கையில் தலை தூக்காமல் இலங்கை அரசு கண்டிப்புடன் செயலாற்ற வேண்டிய அதே வேளை தமிழர்களையும் இணைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பொருளாதார மேம்பாட்டை நோக்கி முன்னேற வேண்டும். சிங்கள தமிழ் இனங்களிற்கிடையேயான சந்தேகப் போக்கு மறைய வேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இன ஐக்கியம் முக்கியமான தொன்று.

**நான் என்று சொன்னால் உதடுகள் ஒட்டுவதில்லை.**
**நாம் என்று சொன்னால் தான் உதடுகள் ஒட்டும்.**

என்ற கலைஞரின் வரிகளை நாம் இங்கே நினைவு கூர வேண்டும்.

இத்தகையதொரு நல்ல மாற்றம் இலங்கையில் ஏற்பட்டு வரும் இந்த வேளையில் இங்கே இருக்கும் சில அரசியல் வாதிகளும் ஊடகவியலாளர்களும் பிரிவினை வாதிகட்கு மீண்டும் உயிருட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள். அறிவும் ஆற்றலும் தொலை நோக்கும் கொண்ட இலங்கை , இந்திய அரசுகள் இவர்களைக் கணக்கெடுக்காத போதிலும் ; கலைஞர் குறிப்பிட்டதைப் போல் சிங்கள இன மக்கள் சில வேளைகளில் இதனால் கோபப்படலாம், இலங்கை தமிழினம் மீண்டும் பாதிக்கப் படலாம்.

இலங்கையில் மீண்டுமொரு குழப்பத்தை ஏற்படுத்தி ; மேற்குலக நாடுகளை மீண்டும் அங்கே குடியேறச் செய்து ஆசிய பிராந்தியத்திற்கு ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதே இந்த "சிலரின்" உண்மையான நோக்கம். பெருமளவில் கிடைக்கும் <u>நிதிக்காக</u> தன் இனத்தையும் நாட்டையும் காட்டிக்கொடுக்கும் இந்த சில கயவர்கள் தமக்கு தாமே சூட்டிக் கொண்ட பெயர் தான் தமிழ் இன உணர்வாளர்கள். கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நீக்குப் போக்கு இல்லாத இவர்களின் நடத்தையால் இலங்கை தமிழ் மக்கள் மட்டுமல்ல இந்திய திரு நாடே பாதிக்கப்படக் கூடும். களமில்லாது கலைந்து போன பிரிவினை சக்திகட்கு மீண்டும் தமிழகத்தில் ஒரு களம் அமைத்துக் கொடுக்க இந்த கயவர்கள் முனைகிறார்கள். இது தமிழகத்திற்கும் ஒரு ஆபத்தான விடயமாக மாறப் போகின்றது.


மிகச் சிறந்த ராஜ தந்திரியாகிய கலைஞர் அவர்கள் எதிர்கால நன்மை கருதி இந்த நீக்கு போக்கற்ற தீய சக்திகளை அடக்கி வைக்க வேண்டும். கலைஞர் அவர்கள் திடீரென முளைத்த ஈழத் தந்தை அல்ல. இலங்கை தமிழர் பால் உண்மையான கரிசனை கொண்டவர். அவர்களின் பிரச்சினையை எங்கே? எப்போது? எப்படி? எடுத்துச் செல்ல வேண்டும் என்று நன்கறிந்தவர். எனவே தங்களின் சுயலாபத்திற்காக ஈழத் தமிழரின் பிரச்சினையை சிக்கலாக்கத் துடிக்கும் தீய சக்திகளை கடுமையான சட்டங்கள் மூலம் கட்டுப்படுத்த வேண்டும் என்று மீண்டும் கலைஞரிடம் அன்புடன் வேண்டுகின்றேன்.

***இது 01.07.2009 இல் முதல்வர் கலைஞர் அவர்கள் சட்ட மன்றத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து 02.09.2009 இல் நான் எழுதி "முரசொலி" பத்திரிகைக்கு அனுப்பப்பட்ட கட்டுரை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞருக்கு ஒரு பாசமடல்



ஈழத் தமிழர் பிரச்சினையில் அன்று தொட்டு இன்று வரை காலத்திற்கேற்ப கனிவுடனும் ராஜதந்திரத்துடனும் செயலாற்றி வரும் முதல்வர் முத்தமிழ் தலைவர் கலைஞர் அவர்களிற்கு வணக்கம்!

ஈழத்தமிழருக்காய் போராடவென பல போராளிக் குழுக்கள் புற்றீசல்களாய் புறப்பட்ட போது அன்று அரவணைத்து ஆதரவுக்கரம் நீட்டியது தமிழகமும் இந்திய மத்திய அரசும் தான்.

காலப்போக்கில் இந்த குழுக்கள் தமக்குள் சண்டையினைத் தொடங்கின. அது மட்டுமல்ல ஒவ்வொரு குழுவும் தனக்குள்ளேயே உட்கொலைகளையும் நடத்தின. இதைத் தட்டிக்கேட்ட தமிழர்கள் மின்கம்பங்களில் கட்டப்பட்டு சுட்டுக்கொல்லப் பட்டார்கள். தமிழின அழிப்பை தமிழ் மண்ணில் நடத்தியது வேறு யாருமல்ல, போராடப்புறப்பட்ட போராளிக் குழுக்களே தான்.

தன் இன அழிப்பின் முடிவில் பிரபா தலைவரானார். "தமிழர்களை அழிப்பதற்கு யாரும் தேவையில்லை, தம்பி பிரபாவே அதைச்சிறப்பாக செய்து முடிப்பார்" என்று அன்றைய இலங்கை அதிபர் ஜெயவர்த்தன அவர்கள் பாராட்டுப்பத்திரம் வாசித்ததொன்றே போதும், பிரபா யாரென்பதை வெளிச்சம் போட்டுக்காட்ட.

இன உணர்வு வியாபாரிகள் இதையெல்லாம் மறைத்தார்கள். தெய்வ நிலைக்கு உயர்த்தி கவிதை படித்தார்கள். இதையெல்லாம் பிரபா இரசித்தார். அவர்கட்கு பதவிகளை வாரி வழங்கினார். ஆனால் எந்த மக்களிற்காகப் போராடுவதாகச் சொன்னாரோ அவர்களின் ஏக்கம் அப்படியே தான் இருந்தது.

சகோதர யுத்தம் உட்பட இந்த அனைத்துப் படுபாதகங்களையும் ஒரு தந்தையின் இடத்தில் இருந்து கண்டித்தவர் கலைஞர், பணத்தைக் கொட்டிக் கொடுத்து அவர் தனக்கென ஒரு குழுவை உருவாக்கவில்லை. தட்டிக் கொடுத்து வெட்டிக்கொள்ளச்சொல்லவில்லை. "தம்பி ஒன்று பட்டு நில்லடா" என கதறினார் , கருத்துக்கள் சொன்னார், எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்காக மாறிய பின் இன்று கலைஞரைக் காரணமென்பதில் கருத்தென்ன இருக்கின்றது.

எதிர்க்கட்சி தலைவி ஜெயலலிதா சொன்னது போல் திசை தப்பிப் போன இந்தப் போராட்டம் அணைத்து ஆதரித்த இந்தியாவிற்கெதிராக மாறியது தான் நம்பிக்கை துரோகத்தின் உச்சக் கட்டம்.

பிரபாவிற்கு வாடகைக்கு வீடு எடுத்துக் கொடுத்ததில் இருந்து சகல வழிகளிலும் அவரிற்கு உதவிய உலகத் தமிழர் பேரவைத் தலைவர் சனார்த்தனம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் இந்திய விரோதப் போக்கை கடுமையாகக் கண்டித்து இதே விகடன் குழுமத்தின் ஜுனியர் விகடன் வார இதளில் 1980களில் "தம்பி பிரபாவிற்கு பகிரங்கக் கடிதம்" ஒன்றை எழுதினாரே. அதை விகடன் இன்று மறந்து விட்டதா அல்லது மறைத்து விட்டதா? அன்றே இந்தியா விழித்திருந்தால் ராஜீவை இழந்திருக்க மாட்டோம். , எண்பதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள், ஏன் முப்பதாயிரம் புலிகள் கூடக் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்

தட்டிக் கொடுத்து கோடிகளைக் கொட்டிக் கொடுத்த M.G.R கூட இந்த இந்திய விரோதப் போக்கால் மனமுடைந்து நோய்வாய்ப்பட்டார் என்ற உண்மை இலங்கைத் தமிழனாகிய நான் சொல்லியா விகடனுக்குத் தெரிய வேண்டும்?

ராஜீவின் படுகொலையால் பழி சுமந்தவர் கலைஞர். கட்சி களங்கப்பட்டது. ஆட்சி கலைக்கப்பட்டது, ஈழத் தமிழர் போராட்டத்திற்கு தோள் கொடுத்த காரணத்தால் கலைஞர் சுமந்த முள் கிரீடங்கள் எத்தனை என்பதை விகடன் நன்றாகவே அறியும். அப்படியிருந்தும் இப்படி எழுதுகின்றது என்றால் அந்தப் பேனாவில் இருந்தது மையல்ல கயமை. அதுவே உண்மை.

ஒரு இயக்கம் பயங்கரவாத இயக்கமாக மாறிய பின்பு அது வேரோடு களையப்பட வேண்டும். இல்லையேல் அந்த வேர்கள் தமிழகத்திலும் நிலையூன்றி விடும். அப்போது எண்பதாயிரம் தமிழர்கள் மட்டுமல்ல ஆறு கோடி தமிழர்களும் அழிக்கப்பட்டிருக்கலாம். முதலுக்கே மோசமாகிப் போன புலிகளின் போராட்டத்தில் விகடனே உனக்கென்ன புதிதாய் நாட்டம்? இது எதற்கான வெள்ளோட்டம்? மிச்சசொச்சமிருக்கும் இலங்கைத் தமிழினத்தை கூண்டோடு அழித்துவிட ஏதோ ஒரு மேற்கத்திய நாட்டிடம் நீ கரண்சிகளை வாங்கியிருப்பதாகச் சொல்லலாமா? பயங்கரவாதத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்து ஒட்டு மொத்த தமிழினத்தையே அழிக்கத் துடிக்கின்றாயா விகடனே?

இனியொரு யுத்தம் எமக்கு வேண்டாம் . வேண்டவே வேண்டாம் . சிங்கள மக்களுடன் அரவணைத்து வாழவே நாங்கள் விரும்புகின்றோம். கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நீங்களெல்லாம் இந்தியராக வாழ்வதைப் போல் இலங்கையராக வாழவே நாங்கள் விரும்புகின்றோம்.

இதனால் தான் இங்கிருக்கும் இன உணர்வு வியாபாரிகளை நீக்குப் போக்காக நடக்கும் படி கலைஞர் கேட்டிருக்கின்றார். இது காலத்தின் கட்டாயம். மறைக்க முடியாத ஒரு யதார்த்தம். இலங்கைத் தமிழனின் வாழ்க்கை விகடமல்ல , நீங்கள் விளையாடிக்கொண்டே இருப்பதற்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வழி உறைவது உலகம் - அதனுடன்
அவ்வழி உறைவது அறிவு.

**அன்புடன்**
**இலங்கையனாக வாழ விரும்பும்**
**இலங்கைத் தமிழன்.**

இது தமிழகத்தில் இருக்கும் "இன உணர்வு வியாபாரிகள்" இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இனி நீக்குப் போக்காக நடந்து கொள்ள வேண்டும். பொறுப்பில்லாமல் பேசி புதிய வாழ்க்கையில் அடியெடுத்து வைத்திருக்கும் அவர்களை மீண்டும் சிக்கலில் மாட்டி விடாதீர்கள்" என 01.07.2009 இல் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்ட மன்றத்தில் ஆற்றிய நீண்ட உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து "கருணா நிதிக்கு ஒரு பகிரங்கக் கடிதம்" என்ற தலைப்பில் 09.07.2009 ஆனந்த விகடன் வார இதழில் வெளி வந்த கடிதத்திற்கு தமிழகத்தில் இருந்து நான் எழுதிய பதில் கடிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vijay க்கு ஒரு அன்பான எச்சரிக்கை




இளம் தலை முறையின் வசீகர நாயகன் விஜய் அரசியலில் இறங்கப் போகின்றாராம். நல்லது! இலங்கைத் தமிழர் சார்பில் நாமும் அவரை வரவேற்கின்றோம். ஏனென்றால் இவர் இலங்கையின் மருமகனும் அல்லவா!.

இவரின் அரசியல் பின்னணியில் புலிகளும் , புலம் பெயர் இலங்கைத் தமிழர்களும் இருப்பதாக சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி மண்ணின் மைந்தரான இலங்கைத் தமிழருக்கு ஒரு விசனத்தை ஏற்படுத்துகின்றது. கனடா , அவுஸ்ரேலியா , ஐரோப்பா என சர்வதேச நாடுகளில் வாழும் தமிழர்கள் அந்நாடுகளின் பிரஜாவுரிமை பெற்றவர்கள். இவர்களின் குழந்தைகள் தமிழைத் தவிர பிற எல்லா மொழிகளையும் பேசுகின்றனர் அடைக்கலம் தந்த அந்த நாடுகளில் தங்கள் சொகுசு வாழ்க்கை தொடர வேண்டும் என்பதற்காக தான், இவர்கள் மீண்டும் புலிகட்கு உயிரூட்ட முயற்சிக்கின்றனர். தாய் மண்ணிலேயே சிதைந்து போன இவர்களின் தமிழ்க் கனவை புலம் பெயர் நாடுகளில் அமைப்பதாக இவர்கள் சொல்லும் போது "கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்" என்ற எங்கள் பழமொழி தான் நினைவுக்கு வருகின்றது. இந்தியா , சீனா , ரஷ்யா , மியான்மார், பாகிஸ்தான் என பல ஆசிய நாடுகளின் பலத்த ஆதரவுடன் முன்னேற்றம் கண்டு வரும் இலங்கையில் மீண்டும் மனிதப் பேரழிவுகளை ஏற்படுத்தி புவி சார்ந்த அரசியல் காரணங்களுக்காக மீண்டும் இங்கே ஆதிக்கம் செலுத்த முனையும் சதிகார நாடுகளின் தத்துப் பிள்ளைகள் தான் இந்தப் புலம் பெயர் தமிழர்கள். பிரபாகரனும் அவரின் சில தளபதிகளும் லண்டனில் உயிருடன் இருப்பதாகச் சொன்ன உங்கள் மாமனார் கூட இவர்களில் ஒருவராக இருக்கலாம். தாய் நாட்டை விற்றுப் பிழைக்கும் இவர்களை ஒரு பக்கம் தள்ளி விடுங்கள்!. உங்கள் தமிழக மண்ணிலே புலி எதிர்ப்பும் , ஆதரவும் அரசியல் கட்சிகளில் ஏற்படுத்திய தாக்கத்தை சற்றுப் பார்ப்போமா?

1) புலித் தலைவர் பிபாகரனை டெல்லிக்கு அழைத்து அவருடன் ஒப்பந்தம் போட்டு துணைக்கு இந்திய இராணுவத்தையும் அனுப்பியதன் முலம் அகில இந்திய காங்கிரஸ் கட்சி தங்கள் தலைவனை இழக்க நேரிட்டது. புலிகளின் பாசிச பயங்கரவாதத்தை தெளிவாக புரிந்து கொண்ட பின் அவர்களை தடை செய்து புலிகள் அழிக்கப் பட வேண்டும் என்பதில் உறுதியாக நின்றதால் தான் பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் அரசு அமைந்தது.

2) இலங்கைப் பிரச்சினையை சரிவரப் புரிந்து கொள்ளாமல் அதைக் கையிலெடுத்ததன் விளைவு பாரதீய ஜனதாக் கட்சியை பெரும் தோல்விக்குள்ளாக் கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளே காரணம்!

*கல்கி 21.6.09 இதழில் 'ராஜபக்ஷே ஏமாற்றி விடுவார்' என்று தலைப்பிட்டு இலங்கைத் தமிழ் எம்.பி. சம்பந்தம் பேட்டி வெளியானது. அது குறித்து தமது மாற்றுக் கருத்துகளைத் தெரிவிக்கிறார் ரவிக்குமார். இவர் கொழும்பில் 'ஸ்டடி அண்ட் ஜாப் கன்சல்டன்ஸி' என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார்.*

"புலிகளின் ஊதுகுழலாகச் செயல்பட்டவர்தான் தமிழ் எம்.பி. சம்பந்தம். தம்மை எம்.பி.யாக்கிய தமிழ் மக்களுக்கு உதவியாக இறுதிப் போரின்போது கூட களத்தில் நிற்காது, வெளிநாடுகளில் இருந்த இவருக்கு, இலங்கை தமிழர் பிரச்னை பற்றிப் பேசவே எந்த உரிமையும் இல்லை.





* ரவிக்குமார்

இராணுவ ரீதியிலோ, அரசியல் வழியிலோ தமிழருக்கு எந்த ஒரு நன்மையையும் தேடித்தராத புலிகள், அவர்களை நாடற்றவராக மாற்றி, சொந்த மண்ணிலேயே அவர்களை அகதிகளாக்கிவிட்டார்கள்.

புலிகள் மீதான இறுதிப் போரில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதற்கு புலிகளே காரணம். அவர்களே மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தார்கள். அகதிகளின் மறுவாழ்வு என்ற போர்வையில் அந்நிய சக்திகள் மீண்டும் தமிழ் மக்களிடையே ஊடுருவி, குழப்பத்தை ஏற்படுத்த முயலலாம். இதனால்தான் இலங்கை அரசு உதவிகளை தானே நேரிடையாகச் செய்ய விரும்புகிறது.

இலங்கை ஒரு மிகச் சிறிய நாடு. மாகாணங்களை இணைப்பதோ மாநிலங்களை உருவாக்கி அதிகாரப் பகிர்வு அளிப்பதோ தேவையே இல்லாத ஒரு விஷயம். ஒரு குட்டி நாட்டுக்கு அதிகாரப் பகிர்வு கொண்ட பல மாநிலங்கள் தேவை இல்லை. வலிமை மிக்க மத்திய அரசே போதும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இலங்கையின் எப்பகுதியிலும் விரும்பியவாறு குடியேறி வாழத் தொடங்கினால் அதிகாரப் பகிர்வு என்ற வார்த்தையே அர்த்தமற்றதாகி விடும்."

சேர்ந்த விவசாயிகளும் கலந்து கொள்வார்கள்.

இப்போதைக்கு அவர்களின் முக்கியத் தேவை தரமான விதைகள்" என்கிறார்!

**இதே போல வேறு எந்த நாட்டிலாவது பணிபுரிந்திருக்கிறீர்களா?**

"ஓ! வியட்நாமிலும், கம்போடியாவிலும் மேற்கொண்டிருக்கிறேன். அந்நாடுகளில் முக்கியப் பயிரே நெல்தான்! இன்று இரண்டு நாடுகளும் மிக உயர்தர அரிசியை ஏற்றுமதி செய்யுமளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளன. அதற்காக எனக்கு விருதளித்துக் கௌரவித்தார்கள்."

**ராஜபக்ஷே தமிழர்களின் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசினாரா?**


"நான் வேளாண் விஞ்ஞானி என்பதால் என்னிடம் விவசாயப் புனரமைப்புத் திட்டம் பற்றித்தான் விவரமாகப் பேசினார். ஆனாலும், வடக்கு மாகாண தமிழ் மக்கள் வரும் பருவத்திலேயே விவசாயத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என்ற அவரது பேச்சிலிருந்து, தமிழ் மக்களின் மறுவாழ்வில் அவர் போதிய அக்கறை கொண்டிருப்பதாகவே தெரிகிறது."

– எஸ்.சந்திரமௌலி



LION OF ASIA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புலிகளின் ஊதுகுழல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பாசிச புலிகட்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாத இந்திய கம்னியூஸ்ட் கட்சியோ புலி ஆதரவு நிலைப் பாட்டை எடுத்து புலி பயங்கரவாதத்திற்கு எதிரான போரை தமிழின அழிப்பென பிரசாரம் செய்ததால் அகில இந்திய கம்னியூஸ்ட் கட்சி காணாமலேயே போய்விட்டது.

4) பிரபாகரனுடன் நெருங்கிப் பழகி புலிகட்கு பெரும் நிதியுதவி செய்தவர் அமரர் எம்.ஜி.ஆர் ஆனால் புலிகள் இந்தியாவிற்கு எதிராகத் திரும்பி தீவிர இந்திய எதிர்ப்பாளராக மாறிய போது மனம் உடைந்த எம்.ஜி.ஆர் நோய்வாய்பட்டதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

5) எம்.ஜி.ஆரிடம் கொண்ட நெருக்கம் காரணமாக புலிகள் ஆரம்பத்தில் இருந்தே கலைஞரை எதிர்த்து வந்தார்கள். கலைஞர் கொடுத்த நிதியுதவியை ஏற்க மறுத்து அவரை அவமானப் படுத்தினார்கள். ஆயினும் இன உணர்வின் அடிப்படையில் கலைஞர் இலங்கைத் தமிழருக்கு ஆதரவு அளித்ததால் ஆட்சியைப் பறி கொடுக்கும் நிலை ஏற்பட்டது. ராஜீவ் காந்தி கொலையுடன் சம்பந்தப் படுத்தியதால் தி.மு.க கட்சிக்கு பெரும் அவமானமும் தேர்தலில் படு தோல்வியும் ஏற்பட்டது.

6) அமரர் ராஜீவ் காந்தி கொலையால் ஏற்பட்ட அனுதாப அலை மூலம் அ.தி.மு.க தலைவி ஜெயலலிதா 40 தமிழக தொகுதிகளிலும் வெற்றி பெற்று முதல்வரானார். புலிகளின் இந்த படுகொலையைக் கண்டித்து தமிழக மக்கள் எழுதிய வரலாற்று தீர்ப்பு இது.

7) புலிகளை தீவிரமாக எதிர்த்தவர் ஜெயலலிதா . பிரபாகரனைக் கைது செய்து நாடு கடத்த வேண்டும் என தமிழக சட்ட மன்றலில் தீர்மானமே போட்டவர். ஆனால் 2009 April லில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் புலி ஆதரவு கட்சிகளுடன் கூட்டணி அமைத்ததன் விளைவு தோல்வியை ஏற்படுத்தியது. திடீரென ஈழத் தாயாக மாறி தமிழ் ஈழம் பற்றியெல்லாம் இவர் பேசியது பெரும் நகைச் சுவையாக இருந்தது.

8) புலிப் பணத்தில் கட்சி நடத்தி தமிழ் ஈழ கனவு கண்ட வை.கோவின் **ம.தி.மு.க இன்று மரணித்த தி.மு.க வாகி விட்டது.** இப்போதெல்லாம் புலி என்று வை.கோ வாய் திறந்தாலே "போரடிக்குது தலைவா வேற ஏதாவது பேசு" என அவரின் தொண்டர்களே கிண்டலடிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

9) சர்க்கஸ் கோமாளியைப் போல் அடிக்கடி தாவிக் கொண்டிருக்கும் ராமதாசுவின் பா.ம.க கடசி , இலங்கையின் யுத்தத்தில் கொல்லப்பட்ட பிணங்களின் மேல் நடத்திய அருவெருக்கத்தக்க பிரசாரத்தால் பாடையில் ஏறிய மக்கள் கட்சியாக மாறி விட்டது . இனிக் குழி தோண்டிப் புதைக்க வேண்டியது தான் மீதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) ஒரு காலத்தில் பிரபாகரனின் தீவிர ஆதரவாளராக இருந்து தனது மகனுக்கு பிரபாகரன் எனப் பெயரிட்டவர் விஜயகாந்த் . தமிழீழம் கிடைக்கும் வரை பிறந்தநாள் கொண்டாட மாட்டேன் என்றெல்லாம் சபதம் போட்டவர். காலப் போக்கில் தமிழக மக்கள் புலிகளை எதிர்க்கிறார்கள் , வெறுக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு அடக்கி வாசித்ததால் தான் கணிசமான வாக்குகளைப் பெற்று தே.தி.மு.க பலமான ஒரு எதிர்க் கட்சியாக மாறி வருகின்றது. புலி ஆதரவைக் கையில் எடுத்திருந்தால் மக்கள் தேய்ந்து போகும் தி.மு.க வாக மாற்றியிருப்பார்கள்.

11) புலிகள் ஒழிக்கப் பட்டால் தான் இலங்கையின் மூவின மக்களும் நிம்மதியாக வாழ முடியும் என்பதை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டதால் தி.மு.க காங்கிரஸ் கூட்டணி பெரும் வெற்றி பெற்றது. உணர்வு பூர்வமான இந்த பிரச்சனையை வியாபாரமாக்கி கூத்தடித்த அரசியல் கோமாளிகள் காணாமல் போய் விட்டார்கள்.

12) எங்கள் அன்புக்குரிய விஜய் அவர்களே! இது வெல்லாம் உங்கள் கண்முன்னே நடந்த , நடந்து கொணடிருக்கும் சம்பவங்கள், காட்சிகள். இனி வரும் காலங்களில் தி.மு.க , அ.தி.மு.க ஆகிய பிரதான கட்சிகள் தமக்கு ஆதரவளிக்காது என்பதையும் , ஆதரவளிக்கும் ம.தி.மு.க , பா.ம.க போன்ற கோமாளிக் கட்சிகளால் இனி எதையும் சாதிக்க முடியாது என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்டதால் தான் , ஒளிந்து வாழும் புலிகட்கு மீண்டும் தமிழகத்தில் தளம் அமைக்க புலம் பெயர் இலங்கைத் தமிழர்கள் உங்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள். உங்கள் மனைவி இலங்கைத் தமிழ் பெண்ணாக இருப்பதும் , மாமனார் புலம் பெயர் தமிழராக இருப்பதும் இவர்கட்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது.


13) புலி ஆதரவு பின்னணியில் நீங்கள் அரசியல் களம் அமைக்க இருந்தால் அந்தத் தொடர்புகளை இப்போதே துண்டித்து விடுங்கள். சாப்பிட கொடுத்த கையையே கடித்துக் குதறும் புலிகள் சுய இலாபத்திற்காக யாரையும் கொல்ல தயங்கமாட்டார்கள் என்பதை வரலாறு நிருபித்திருக்கின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழருக்கு நீங்கள் பல வழிகளில் உதவலாம். ஆனால் அவர்களை மீண்டும் யுத்தத்தில் தள்ளி விடும் சூழ்ச்சிக்கு பலியாக்கி விடாதீர்கள்.

உங்கள் செல்லமான பாஷையில் சொல்வதானால்) “ அண்ணா வேண்டாண்ணா புலி வாலைப் பிடிச்சா அப்புறம் விடவே முடியாதுண்ணா இப்பவே விட்டிருங்கண்ணா” என்று தான் சொல்ல வேண்டும். தங்கள் மீதிருக்கும் உண்மையான அன்பினால் தான் அன்பான எச்சரிக்கையாக இதைச் சொல்லி இருக்கின்றோம். முடிவெடுக்க வேண்டியது இனி நீங்க தாண்ணா!

**விஜய்க்கு மட்டுமல்ல புதிதாக யார் தமிழக அரசியலில் களமிறங்க நினைத்தாலும் முதலில் இதைப் படித்து தெளிவு பெறட்டும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகோ நீ போய்கோ



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சியை ஆரம்பித்து கலைஞருடனும் ஜெயலலிதாவுடனும் மாறி மாறி கூட்டுச் சேர்ந்து அரசியல் பிளைப்பு நடத்தி வரும் வை . கோபால்சாமி என்ற வை.கோ தமிழ் பேசும் ஒரு தெலுங்கர். அமெரிக்காவின் இரகசிய உளவாளியாகச் செயற்படும் இவர் புலிப் பயங்கரவாதிகள் முலம் இலங்கையிலும் இந்தியாவிலும் பிரிவினையை உருவாக்க முயன்றவர் முயன்று வருபவர். இவரை நம்பியே பிரபாகரன் பல நடவடிக்கைகளை எடுத்து வந்தார்.



இலங்கையின் இறுதிக்கட்ட போரில் சுமார் முன்று இலட்சம் தமிழ் மக்கள் பிரபாகரனால் சிறைப் பிடிக்கப் பட்டபோது அவர்களை விடுவிக்க வேண்டாம் எனவும் தப்பிச் செல்ல முயலும் தமிழர்களை சுட்டுக் கொல்லுமா்றும் பிரபாகரனிற்கு கட்டளை இட்டவர் இவரே. புலிகட்கு சார்பாக இந்தியாவில் பெரும் புரட்சி ஒன்றை தன்னால் ஏற்படுத்த முடியுமென்வும் அதன்முலம் தமிழகத்தில் ஜெயலலிதாவையும், மத்தியில் பாரதீய ஜனதா கட்சியையும் ஆட்சியில் அமர்த்த முடியுமென பிரபாவுக்கு இவர் ஆசை வார்த்தை காட்டினார்.

இதே ஆசை வார்த்தைகளை சொல்லியே அன்னை திராவிட முன்னேற்றக் கழக தலைவி ஜெயலலிதாவையும் புலி ஆதரவாளராக மாறச் செய்தார். ( செல்வி . ஜெயலலிதா அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த போது தீவிர புலி எதிர்ப்பாளராக இருந்தவர் ; பிரபாவைக் கைது செய்து இந்தியாவிற்கு நாடு கடத்த வேண்டுமென தமிழக சட்ட மன்றத்தில் தீர்மானம் போட்டவர். புலிகளை ஆதரித்ததால் வை.கோவை கைது செய்து ஜெயிலில் போட்டவர். ஜெயலலிதாவுடன் கூட்டு சேர்ந்தால் என் முகத்தில் விழிக்காதே என வை.கோவின் தாய் தன் மகனை தூற்றிய போதும் சந்தர்ப்பத்திற்காக ஜெயுடன் கூட்டு சேர்ந்ததில் இருந்தே வை.கோ எப்படிப்பட்ட ஈனப் பிறவி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.) ஒரு வேளை இந்திய தேர்தல் முடிவுகள் சாதமாக அமையாவிட்டால் பிரபாவையும் அவரின் முக்கிய தளபதிகளையும் காப்பாற்ற அமெரிக்கப் போர் கப்பல் தயார் நிலையில் இருப்பதாகவம் அது விரைவில் வருமென்றும் பிரபாவுக்கு சத்தியம் செய்தார். இவரின் வார்த்தைகளை நம்பியே பிரபா சரணடையாமலும் அப்பாவி மக்களை விடுவிக்காமலும் பொறுமை காத்தார். ஆனால் எதிர் பார்த்தபடி இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் முடிவுகள் அமையவில்லை. இலங்கை இந்திய கடற்படையினரின் மிகத் துல்லியமான கண்காணிப்பால் அமெரிக்கக் கப்பலும் இங்கே வரவில்லை.

அதே வேளை ; இலங்கை இராணுவமோ பிரபாவை நான்கு முனைகளிலும் சூழ்ந்து விட்டது. நடு நடுங்கிப் போன புலித் தலைவர்கள் சரணடைய முயன்றார்கள் , வெறி பிடித்துப் போன பிரபாவும் அவரது மகனும் கண்ணில் பட்ட அப்பாவித் தமிழர்களை எல்லாம் சுட்டு கொன்றார்கள். இறுதியில் தாங்களும் பலியானார்கள் . அது தான் முள்ளிவாய்க்காலில் நடந்த முழுதான உண்மை. புலிகளிற்கும் இலங்கைத் தமிழரிற்கும் ஏற்பட்ட அந்தப் பேரழிவிற்கு காரணம் வை.கோ என்ற இந்த பொய்கோ தான்.

ஆரம்பத்தில் கலைஞருடன் ஒட்டுண்ணியாக தி.மு.க வில் இருந்தபோது கள்ளத் தோணியில் இலங்கை வந்து பிரபாவை சந்தித்து கலைஞரை "போட்டுதள்ள" சதித் திட்டம் தீட்டினார். புரிந்து கொண்ட கலைஞர் அவரை கட்சியில் இருந்து நீக்கிய பின்பு ம.தி.மு.க என்ற கட்சியை ஆரம்பித்து புலிப் பிரசாரத்தை தமிழகமெங்கும் நடத்தினார். இவரோ இவரின் கட்சியோ தமிழக மக்களின் எந்தவொரு பிரச்சினையையும் கருத்திற் கெடுத்ததில்லை. தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் பற்றியும் சிந்தித்ததில்லை.

இலங்கையை பிரிவினைக்குட்படுத்தும் அதேவேளை இந்த புலிப் பயங்கரவாதிகளால் தமிழகத்தையும் இந்தியாவில் இருந்து பிரித்து, அதன் மூலம் இந்தியாவெங்கும் பிரிவினைவாதத்தை தூண்டிவிட்டு சோவியத் ரஷ்யாவைப் போல் இந்தியாவையும் பல துண்டுகளாக சிதறடிக்க வேண்டும் என்பதே இந்த கயவன் வை.கோவிற்கு அமெரிக்க எஜமானர்கள் இட்ட கட்டளை. இதற்கு கருவியாக பிரபாவை வை.கோ பயன்படுத்தினார். இந்தப் பிரிவினைவாதம் பின்னர் ஆசியாவெங்கும் பரவும் போது ஆசியா கண்டத்தின் வளர்ச்சி வெகு வேகமாகப் பின்னோக்கி தள்ளப்பட்டு "ஐரோப்பா உட்பட்ட "வெள்ளை நாடுகள் இவற்றை அடிமை கொள்ளலாம் என்பதே வை.கோவின் வெள்ளை எஜமானர்களின் உண்மையான எண்ணம்.

இலங்கையின் அரசியல் தலைமையை மிகச் சரியானதொரு அரசியல் சாணக்கியரான மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதால் தான் இலங்கை மட்டுமல்ல முழு ஆசியாக்கண்டமும் அந்தப் பேரழிவில் இருந்து காப்பாற்றப் பட்டிருக்கின்றது. புலிகளின் உண்மை முகத்தை சீனா , மியான்மார் , பாகிஸ்தான் , வியட்னாம் என பல ஆசிய நாடுகட்கு தெளிவாகப் புரியவைத்த மாண்புமிகு மகிந்தவின் அரசியல் சாணக்கியம் தான் இந்தநாடுகள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு புலி அழிப்பிற்கு உதவின , தொடர்ந்தும் உதவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. அதனால் தான் "ஆசியாவின் சிங்கம்" என மாண்புமிகு மகிந்தவை அழைக்கின்றோம் ஆராரிக்கின்றோம்.

தன் தாய் நாட்டிற்கும் தாய் மொழிக்கும் எதிராகச் செயற்பட்டு வரும் இனத்துரோகி , தேசத் துரோகி வை.கோவை இந்திய அரசு கைது செய்து மிகக் கடுமையான சட்டங்கள் முலம் தண்டிக்க வேண்டும் என்பதே எங்கள் ஏகோபித்த வேண்டுகோள். இந்திய அரசு இதைத் தீவிரமான பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டுமென தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

## வைகோ நீ போய்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி ஒரு இலங்கை செய்வோம்



***சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இன முரண்பாடுகளிற் கிடையில் இடிந்து போன எங்கள் இனிய தேசம் புதிய மாற்றத்துக்குள் அடி எடுத்து வைத்திருக்கின்றது. அன்னியர் ஆதிக்கமும் தீவிரவாதமும் மகிந்தவின் சிந்தனையின் முன் மண்டியிட்டு மரணித்தது. இலங்கையின் வரலாற்றை இனி மகிந்தவின் முன் மகிந்தவின் பின் என காலம் பிரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. (ம.மு – ம.பி)***

தனி மனிதனோ தேசமோ முன்னேற்றம் அடைய போராடிக்கொண்டே இருக்க வேண்டும். போராட்டத்தின் ஒவ்வொரு அடிகளும் வளர்ச்சியை நோக்கியே இருக்க வேண்டும். புலிகளும் போராடினார்கள்.......... சாத்தியமேயில்லாத ஒரு கனவை தமிழர்கள் மத்தியில் விதைத்து கல்லறைகளைக் கட்டிக் கொண்டே போனார்கள். அவர்கள் பாஷையில் பிணங்கள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டன. ஆமாம் வளர்ச்சியே இல்லாமல் விதைக்கப்பட்ட விதைகள் அனைத்துமே , கப்பி விதைகள்.

அழிவை நோக்கியே போய்க்கொண்டிருந்த இந்த போராட்டத்தை அழித்து விட மகிந்த எடுத்த முடிவு இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பு முனை. அழிக்கவே முடியாதென ஆர்ப்பரித்த புலிக்கூட்டம் அடியோடு அழிக்கப்பட்டது, அதிசயமான உண்மை. தமிழர்களின் கடவுளாக தன்னை சித்தரித்துக்கொண்ட ஒருவன் சாதாரண ஒரு மனிதனாக செத்துப்போனான்.

“நிக்கர் போகம்” என்ற பிரபல பத்திரிக்கை நிருபர் ஒரு சமயம் நாஜிகளின் ஒரு தலைவனிடம் “ நாஜிகளாகிய நீங்கள் அதிகாரம் பெற்றால் என்ன செய்வீர்கள்?” என்று கேட்டான். அதனை வைத்துக் காப்பாற்றுவோம் என்று சுருக்கமாகப் பதில் சொன்னான் அந்த தலைவன். படிப்பது சுலபம் அப்படி நடப்பது கடினம் , பணம் சம்பாதிப்பது எளிது அதை செலவழிப்பது ஒரு வித்தை. அதிகாரத்தை இலகுவில் அடையலாம் , ஆனால் அதைக் காப்பாற்றிப் பயன்படுத்துவது மிக மிக கடினம். புலித்தலைவனும் அதிகாரம் மிக்க ஒரு இராட்சியத்தை உருவாக்கினான் , .ஆனால் அது பூஜ்ஜியத்திற்குள் கட்டப்பட்டது. கனவு தேசமே அதன் குறிக்கோளாக இருந்ததால் கட்டப்பட்ட சில வருடங்களிலேயே காணாமல் போய்விட்டது.

ஆனால் இலங்கையின் அதிகாரத்தைக் கைப்பற்றிய மாண்பு மிகு ஜனாதிபதி அவர்கள் ஒரு தீர்க்க தரிசி. மிகச்சிறந்த ஒரு இராஜ தந்திரி. மக்கள் தனக்களித்த அதிகாரத்தை மிகச் சரியான முறையில் பயன்படுத்தி அதில் வெற்றியும் பெற்று விட்டார். நாட்டுக்கு நல்லது செய்த இந்த அதிகாரம் நீண்ட காலங்கள் நிலைத்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அப்பொழுது தான் வெற்றி உறுதிப்படுத்தப்படும். நாட்டின் வளர்ச்சி உண்மையானதாக இருக்கும். விதைத்தவனே அறுக்க வேண்டும், அதுவே காலத்தின் நியதி.

**தேசிய கௌரவம், இராணுவத்தின் நன்மதிப்பு, சுநந்திரத்தின் இலட்சியம், ஆகிய மூன்றும் தெய்வீகத் தன்மை பொருந்தியடவை.** இதை சகல இலங்கை மக்களும் உணர வேண்டும். சமாதானம் என்பது நாட்டின் உட்கட்டமைப்பில் மட்டுமல்ல வெளியுலகத்தோடும் பேணப்பட வேண்டும். அரசாங்கத்துடன் சமாதானமா? ஆல்லது போராட்டமா? என்பதை மாற்றுக் கொள்கை கொண்டவர்கள் தீர்மானிக்க வேண்டும். அரசாங்கத்துடன் போராட விரும்பியவர்களை கட்டுப்படுத்தும் முழு அதிகாரமும் அரசின் கைகளில் வர வேண்டும். விதைத்தவன் அறுப்பதை வீணர்கள் தடுக்கக் கூடாது!

பயங்கரவாதத்தால் ஏற்பட்ட கஷ்ட நிஷ்டுரங்கள் நம் கண்முன்னே இப்போதும் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. இது மீண்டும் தலை தூக்காமலும் அதேவேளை **அழிவில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவும் சர்வல்லமை பொருந்திய ஒரு தலைவனே நாட்டின் உடனடித் தேவை.** நாடு வளர்ச்சியின் எல்லையை அடைய வேண்டுமானால் மாற்றுக் கருத்துக்கள் தலை தூக்கக் கூடாது.

மாண்புமிகு மகிந்தவின் கட்சி தனிப் பெரும் கட்சியாக இருக்க வேண்டும். மாகாண அரசுகள் மத்திய அரசுக்கு கட்டுப்பட வேண்டும். மகிந்த சிந்தனைகள் மக்களிடையே மிக வேகமாக பரப்பப்பட வேண்டும். இதற்க்கென ஒரு புதிய அமைப்பை உருவாக்கி அதற்கொரு பிரசார மந்திரியை நியமிக்க வேண்டும்.

இதுவெல்லாம் நாட்டின் வளர்ச்சிக்கு முன்வைக்கப் படும் திட்டங்களே தவிர ஒரு தனி மனித துதிப்பாடல் கள் அல்ல. அழிவில் இருந்து மீண்டு ஆக்கத்தில் அடி யெடுத்து வைக்கும் ஒரு நாட்டின் அவசரத் தேவை ஜன நாயகம் அல்ல. சர்வ வல்லமை பொருந்திய ஒரு ஜனநாய கத் தலைவனே! உடன் படிக்கைக்காக **செலவு செய்யப்பட்ட தாழும் மையும், வாழும் கையுமாக மாறிப் போனதே யதார்த் தம்.** இனி காகித உடன் படிக்கை கள் தேவை யில்லலை. செயற்படும் ஒரு தலைவனே தேவை.




இதுவரை இருந்த இலங்கை சமுதாயத்தை ஒரு தொகுதியாக எடுத்துப் பார்த்தால் எல்லோரும் எல்லோரையும் எதிர்த்து நிற்கும் ஒரு குழப்பமான காட்சியே காணப்பட்டது, இப்போதும் காணப்படுகின்றது. இதில் இருந்து இந்த சமுதாயத்தை விடுவிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அதனைக் காப்பாற்ற வேண்டும். "யுத்தத்தினால் விழுந்து போன நாட்டைக் காப்பாற்றி கொடுக்கும் பொறுப்பை கடவுள் என்னிடம் ஒப்படைத்து இருக்கிறார்." என ஹிட்லர் தன்னம்பிக்கையுடன் சொன்னார். இங்கே அது மாண்புமிகு மகிந்தவிடம் கொடுக்கப் பட்டிருக்கின்றது என்ற உண்மையை நாம் உணர வேண்டும். ஹிட்லர் "ஒற்றுமை சட்டம்" கொண்டு வந்தது போல் ஒரு சட்டம் உருவாக்கப்பட வேண்டும். ஆள்வோர் , ஆளப்படுபவரின் எண்ணங்கள் ஒன்றாக இருக்க வேண்டும். அனைவரும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

தேசத்திற்காக உழைப்பதே உண்மையான கௌரவம் என்ற உணர்வு, என்று ஒவ்வொரு இலங்கையரிடமும் தோன்றுகின்றதோ , அன்று ஜனநாயகத்தைப் பற்றி நாம் சிந்திக்கலாம். அது வரை இந்த நாட்டின் இன்றைய தேவையை துல்லியமாக கணிப்பீடு செய்த மாண்புமிகு ஜனாதிபதியின் ஆட்சி தொடர்வதற்கு தூண்களாக நாம் தோள் கொடுப்போம்.

வீழ்வது நாமாக இருந்தாலும்
வாழ்வது நாடாக இருக்கட்டும்!

நாடென்ன செய்தது உனக்கு என்று கேள்விகள் கேட்பதை விடுத்து நீ என்ன செய்தாய் அதற்கு என்று நினைத்தால் நன்மை உனக்கு.

***மக்களின் பேச்சை கேட்டு அதன் படி இயங்குபவன் உண்மையான தலைவனாக முடியாது. மக்களிற்கு எது தேவை என்பதை உணர்ந்து அதைச் செயற் படுத்துபவனே உண்மையான தலைவன்.***

**(வலம்புரி 20.10.2009 இல் வெளிவந்த ஜனாதிபதியின் செய்தியை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டட கட்டுரை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்கால் பகுதியில் புலிகளிடம் இருந்து
விடுவிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில்
அரசினால் பாதுகாக்கப் பட்ட மக்கள்
தற்போது தங்கள் சொந்த வதிவிடங்களிற்கு
மீளத் திரும்புகின்றார்கள். இவர்களில் சிலர்



என்னுடன் பகிர்ந்து கொண்ட இதயமில்லா
இறுதி நாட்களின் அனுபவங்கள்
கையெழுத்துப் பிரதிகளில் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலியின் பின் வாழ்வு

பயங்கர வாதத்தினை. அழித்து. மக்களை மீட்டும் மனிதாபிமான. பாதுகாப்பு படையினரின் பணி இவ்வளவு பல தினங்களின் பின்பு. வன்னியில் வாழ்ந்த மக்கள் இன்று நிம்மதியாக வாழ்கின்றனர். இந் நிலை தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வன்னியில் பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கிய பல்லாயிரக்கணக்கான குடும்பங்களில் எனது குடும்பமும் ஒன்று. கிளிநொச்சியை இருப்பிடமாக கொண்டிருந்த எனது குடும்பம். இடம் பெயரத் தொடங்கியது. இடப்பெயர்வின் வலி சொற்களால் சொல்ல முடியாதது. பல உயிர்களோடு சேர்ந்து. நானும் எனது மனைவி, மகன் மூவரும் இடம் பெயர்ந்து பெயர்ந்து. இறுதியில் முள்ளிவாய்க்கால் எனும் இடத்தில் பதுங்கினோம் இடம் அது எமக்கு. விடத்தல் முள்ளை அகற்றிவிட்டு தரப்பாளை மேலாக கட்டிவிட்டு. இருந்தோம். வயிற்றுப் பசிக்கு சுத்தத் தண்ணீர் கிடைப்பதற்கு அங்கும் இங்கும் தேட வேண்டும். உயிரை காப்பதற்காக. நாமும் பலரும் பலமுறை இராணுவத்தினர் இடம் செல்வதற்கு முயற்சி செய்தும் முடியவில்லை. காரணம் புலிகள் எங்களை மட்டுமல்ல அங்கிருந்த ஒருவரையும் பாதுகாப்பு படையினர் இடம் செல்ல அனுமதிக்கவில்லை. மீறிச் செல்வோர் மீது. துப்பாக்கிச் சூடு செய்தனர்.

இவ்வாறு உயிருக்கும், பசிக்கும் பயந்து நாம் பங்கருக்குள்ளேயே! இருந்தோம். எனது மகனுக்கு 1½ வயது பால்மா இல்லை. கிலோ 1, கு 3000/. சிறிய சொக்லேட் கிறீம் பிஸ்கட் பை 800/. ஒரு ரொட்டி தூக்கிப் பார்த்தால் மறுபக்கம் தெரியும் அது 100/. சோறுப்பருப்பு. 1500/. தேங்காய் இல்லை அரிசியும் பருப்பும் தண்ணியும் சேர்ந்த சாப்பாடுதான் 8 நாள் எங்களுடைய உணவு. மாத்தளன் பகுதிகளை பாதுகாப்பு படையினர் மீட்டனர் என்னும் செய்தியினைக் கேட்ட எனக்கும் அப்படி ஒரு நாள் வரும் என்ற நம்பிக்கையுடன் இருந்த எனக்கு 15-05-2009 பாதுகாப்பு படையினர் ஒலி பெருக்கி மூலம். அறிவித்தல் "தமிழ் மக்கள் அனைவரும் பாதுகாப்பாக பங்கருக்குள் இருக்கவும் நாம் உங்களை மீட்கின்றோம்". குறிப்பிட்ட நேரத்தில் நண்பகல் 12.00 மணி இருக்கும் நாம் ஒரு 7 அல்லது 8 குடும்பம் மொத்தம் 35 பேர் வரை ஒரே கையில் எடுத்த பாக்குகளும் உடுத்த உடுப்புடனும் பாதுகாப்பு படையினர் இடம் செல்ல சென்றோம்! எண்ணிப் பார்ப்பு ஒரு 100m தூரம் நடந்திருப்போம். முள்ளிவாய்க்கால் பிரதான வீதியில் நின்று. பாதுகாப்பு படையினர் எம்மை. பயம் வேண்டாம் இனி உங்களுக்கு பிரச்சனை இல்லை என எங்களை அணைத்து. ஒரு அடி மரத்தின் கீழ் இருத்தி. தண்ணீர் தந்தனர். அப்போது தண்ணீர் அல்ல உயிர் காக்கும் அமுதமாக இருந்தது. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை பஸ்களில் ஏற்றி இரட்டை வாய்க்கால் பகுதிக்கு கொண்டு சென்ற
பாதுகாப்பு படையினர். இன்முகத்துடன் அங்கிருந்த பயணிகளைக் கண்டனர்.
எம் மக்களுக்கு உணவுப் பொதியும், பிஸ்கட் பைக்கற்றும் தந்தனர் 8, 9 மாதங்களாக
பிஸ்கட்டை காணாத எனக்கு "பிஸ்கட்" அமிர்தம் போல இருந்தது.
பின்பு 15-05-09 இரவு 7.00 மணி அளவில் பஸ்களில் ஏற்றி. ஓமந்தை.
படையினரின் தடுப்பரண்களில் அங்கும் உணவுகள், தண்ணீர் கொடுத்தனர்.
பின்பு தந்து 16-05-2009ல் எம்மை செட்டிகுளம் இராமநாதன் நலன்புரி.
நிலையத்தில் குடியமர்த்தினர் நலன்புரி நிலையத்தில் 5 மாதம் அளவில் இருந்து
மீள்குடியேற்றத்தின் போது நான் எனது பிறந்த ஊரான [illegible]
சேர்ந்த ஊரில் பகுதிக்கு வந்து சேர்ந்து எனது குடும்பத்துடன் சந்தோஷமாக
உள்ளேன். நான் புனர்வாழ்வு நிலையத்தில் உள்ள எனையவருக்கும் மிக விரைவில்
மீள்குடியேறுவர் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் நலன்புரி நிலையத்தில் இருக்கும் பொழுது
நாம் மிக சந்தோஷமாக இருந்தாலும் கூட சில குறைபாடுகள் குறிப்பாக
தண்ணீர் தட்டுப்பாடு, மலசலகூடம், சுகாதாரமின்மை குறிப்பாக. வெளிப் பிரதேச
சிங்கள டொக்டர் மார்கள் எம்மை நோயாளியாக கவனித்து மருந்து தர
முடியாத ஒரு நெருக்கடி நிலை இருந்தது.

இன்றைய காலத்தில் நாம் அனைவரும்
'ஆசியாவின் ஆச்சரியம்' திட்டத்தின் மூலம் சுதந்திரமாக இன்புற்று, மொழி வேறு
பாடு இன்றி நாம் அனைவரும் ஒரே இலங்கை நாட்டின் பிரஜைகள்
என்பதை பெருமிதத்துடன் கூறிக் கொள்வோமாக.

இன்று போல் என்றும் சிறப்பாக நாம் வாழ
இறைவனை வேண்டுவோம்...

வலிக்காமல் வாழ்க்கை இல்லை
பல வலிகளின் பின் நாம் இன்று
நிம்மதியாக நாம் வாழ்கின்றோம்.
இவ் வாய்ப்பினை எமக்கு அளித்தவர்கள்
(1) மே.தகு. ஜனாதிபதி அவர்கள்
(2) பாதுகாப்பு படையினர்கள்.

ஆ. [illegible]
21/11/09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி ஒரு யுத்தம் வேண்டாம்

பயங்கரவாதத்தை வீழ்த்தி எம்மை மீட்டெடுத்து, எம்மை எமது உறவுகளுடன் சுதந்திரமாக வாழ வைத்திருக்கும் மாண்புமிகு ஜனாதிபதிக்கு நன்றி. வன்னியில் வாழ்கின்ற மக்கள் பட்ட துயரம் வார்த்தையால் சொன்னால் அது மிகையாகாது. பயங்கரவாதிகள் (L.T.T) பிடியில் பட்ட இளைஞர், யுவதிகள், சிறுவனாய் ஆனவர், சிறுவனாய் இருந்தவர், வயது வந்தவர்கள் வராதவர்கள் என்ற வேறுபாடு இன்றி தமது பயங்கரவாதப் போராட்டத்திற்கு பலியாக்கியதும், ஊனமாக்கியதும், இளைஞர்களை அனாதைகளாக்கியதும் எங்க ஒரு மனித வர்க்கமே தமது இரத்தத்தை தானே அழித்த வரலாறு எங்குமே காணமுடியாது அந்த இழிவான மிகவும் கீழ்த்தரமான ஒரு செயலை பிரபாகரனின் பயங்கரவாதச் செயல் காட்டியுள்ளது.

நாங்கள் உங்கள் அரசு, நாங்கள் பிரதிநிதிகள் என்றில்லாமல் சொல்லி வன்னி வாழ் மக்களையும் உலகத்தில் வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழ் மக்களை ஏமாற்றி வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலைமை மக்களுக்கு தெரிய வந்த போது மக்கள் அரசினை நோக்கி செல்ல முயன்ற போது அவர்களை சுட்டனர் மீறிப்போன மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர். அதுவும் ஒரு வெறிநாயை கொல்வது போல நடு ரோட்டிலே சுட்டு கொன்றனர் ஆயிரக்கணக்கான மக்கள் முள்ளிவாய்க்காலில் பல பயங்கரமாக முறையில் கொலை செய்தது [illegible] இருந்த மக்களின் மனதில் என்றுமே ஆறாத வடுவாக இருக்கிறது. புலி பயங்கரவாதிகள் பிடியில் இருந்து தப்பி இராணுவத்திடம் வந்து சேர்ந்தது முதல் எடுத்து வகைகளுக்கு இராணுவம். இராணுவத்தினர் எங்களை மகிழ்ச்சியுடனும், உரிமையோடும் வரவேற்றனர். ஆனால் பயங்கரவாதிகள் எங்களுக்கு வந்த உணவுப் பொருட்கள், மருந்துகள், போன்ற அத்தியாவசியமான பொருட்களை எல்லாம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து எம்மை விட அந்த பொருட்களுக்கு முதலிடம் கொடுத்து தமது பயன்பாட்டிற்கு உபயோகித்தனர்.

எவ்வளவு கொடுமைகளையும், துன்பங்களையும் தான் மக்கள் தாங்குவார்கள்? மக்கள் ஆயிரம் கொண்ட இறுதியில் புலிப்பயங்கரவாதிகள் வாளால் வெட்டியும், அடித்தும் கொன்றனர். இராணுவத்திற்கும் புலிகளுக்கும் நடந்த யுத்தத்தை விட தமிழ் மக்களுக்கும் புலிப்பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடந்த பிரச்சினைகள் ஏராளமான அநியாயம். மக்களுக்காக போராடுவது என்றால் மக்களே புலியை அழித்தது ஏன்? அவ்வளவு கொடுமைகளை புலிகள் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக செய்திருக்கிறார்கள். உப்பை தின்றவன் தண்ணீர் குடிக்கத்தான் வேண்டும் போல தப்பை செய்த புலிகள் தண்ணீர் [illegible] நேர்ந்தது. இது காலத்தின் யுத்தம். தர்மம் வென்றது அதர்மம் அழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் உணவு இல்லை, மருந்துகள் இல்லை என்று புலிகளிடம் மக்கள் சொன்னபோது புலிகள் சொன்ன சொல்லு! எந்த ஒரு மனித இனத்தாலும் தாங்க முடியாதது "மேல் உலகம் சென்றால் மருந்து கிடைக்கும்" என்ற பதில் எந்த கவிஞனின் நெஞ்சைவிட்டகலாது. ஒரு 60 வயது முதியவர் புலிப்பயங்கரவாதிக்கு வயலில் விளைவது உங்களுக்கு, கடலில் பிடிக்கும் மீன் உங்களுக்கு, காட்டில் உள்ள மரம் உங்களுக்கு எல்லாமே உங்களுக்கு, எல்லாமே உங்களுக்கு உங்களுக்கு என்றால் எங்களுக்கு என்ன? என்று அந்த முதியவர் கேட்ட போது உனக்கு மரணம் என்று சொல்லிவிட்டு வயோதிபரின் உயிரைக் குடித்தனர் புலிகள். இந்த கவலை தாங்கிய கொடியவன், மன்னிக்க முடியாதவன், மகத்தான ஒரு இனத்துக்கு பெருமையாக இருக்க நேர்ந்ததோ? இறைவனே.

மேலும் புலிகள் தப்பியோடும் மக்களை விட்டு விலகி ஒழிபவரையும் விட்டுவைக்கவில்லை. கையிலே துப்பாக்கி பிடிக்கத் தெரியாத சிறுவர்களை வலுக்கட்டாயமாக பிடித்துக்கொண்டு சென்று பிடித்துத் தெரிந்து காடுகளில் யுத்தத்திற்கு வலுக்கட்டாயமாக அனுப்பினார்கள். இதில் பரிதாபம் என்னவென்றால் சோற்றுக் கோப்பையை துப்பாக்கியின் மூலம் போடக் கூட தெரியாத சிறுவர்கள். பெரிய பெரிய புலித் தலைவர்கள் எல்லாம் கடைசி இடமான முள்ளிவாய்க்காலிலேயே துப்பாக்கி ஏந்தினர். அதுவரை அவர்கள் சிறுவர்களை போர்களத்துக்கு தள்ளிவிட்டு தாங்கள் தங்கள் உயிரைப் பாதுகாப்பாக வைத்திருந்தனர். தெய்வ பாலகர்களுக்கு உயிர் தப்புமா? இறுதியில் மரணத்தையே அவர்கள் தேடிப் போனார்கள். புலிகள் தப்பியோடிய மக்களைச் சுட்ட போது பொதுக் குழந்தைகள், வயதுடைய குழந்தைகள் எங்கள் கண் முன்னால் புலிப் பயங்கரவாதிகளால் சுடப்பட்டனர்.

வன்னியில் நடந்த சண்டையின் போது இராணுவம் மிகவும் தந்திரோபாயமாக தாக்குதல் செய்தனர். புலிப்பயங்கரவாதிகள் மக்கள் மீதே செல்வீச்சுக்களை பொழிந்தனர். இறுதியில் இராணுவத்துடன் சண்டைபிடிப்பதை விட்டு மக்கள் மீது மிகவும் கண்மூடித்தனமாக தாக்குதல் செய்தனர் புலிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த திருவேலைகளை காயப்பட்டிருந்த போது கப்பலிலிருந்த
வெளிநாட்டவர்களிடம் காட்டிக்கொடுத்து வந்த தென்றபோது புலி பயங்கர
வாதிகள் அங்கே போகக் கூடாது என்று சொல்லி மறித்தனர். பெருந்த
காயமானவர்களின் மனம் தாங்குமா? மீண்டும் சென்றபோது தாய் சேதனை
உட்பட அந்த இடத்தில் இருந்த பேர் வெளிநாட்டவர்கள் முன்னாடி
சுடப்பட்டு தரையில் இடத்திலேயே இறந்தனர். இந்த பரிதாபத்திற்குரிய
விடயம் எவருக்கும் தெரியாது. தெரியப்படுத்துவதற்கும் மனம் வரவில்லை.
இதன் பின் மக்கள் ஆத்திரம் கொண்டு புலிகளை வெறுப்பும், அவர்களின்
வாகனங்களை உடைத்தும் கடலில் போட்டனர்.

இவ்வாறாக நடந்த போராட்டம் இராணுவத்
தலைமையின் திறமையினாலும், மாண்புமிகு ஜனாதிபதியின் முயற்சியாலும்
நிறைவு பெற்றது. உலகில் பயங்கரவாதத்தை ஒழித்த பெருமை, திறமை
மாண்புமிகு ஜனாதிபதியினையே சாரும். இதன் பின் அரசினால் மக்கள்
உள்ளெடுக்கப்பட்டு முகாம்களில் மிகவும் சுதந்திரமான முறையில், சுகமாக,
அவர்களுக்குரிய அத்தியாவசியமான பொருட்களை வழங்கி
அவர்கள் இலக்கே பணியாக இருந்தபோது செய்துவருகின்றது. இன்னும்
ஒரு சில வருடங்களில் வன்னிப் பெருநிலப்பரப்பை மீளக்கட்டியெழுப்புவார்
எமது ஜனாதிபதி. எமது ஜனாதிபதிக்கு கோடி நன்றி ஜனாதிபதிக்கு
நாம் ஆதரவு வழங்கி, எமது நாட்டில் பயங்கரவாதம் என்ற சொல்லே
எமது நாட்டு அகராதியில் இருக்க கூடாது. நமது நாடு, நமது மக்கள்,
நமது அரசு, நமது ஜனாதிபதி என்ற உணர்வோடு எல்லோரும்
ஒற்றுமையாகவும் சுபீட்சமாகவும் வாழவேண்டும். இது பாதிக்கப்பட்ட
எனது வேண்டுகோள் மட்டுமல்ல, தமிழர்கள் எல்லோருடைய ஆசை.

நன்றி

* * * *

751894180V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவன் இருக்கக் கூடாது
இருப்பவன் படிக்கக் கூடாது
தமிழர்களை மாவீரர்கள் ஆக்கி
மண்ணில் புதைப்பதே எனது ஒரே இலட்சியம்

பிரபாகரன் சிந்தனை

## நாம் அனைவரும் இலங்கையர்
## நமக்குள் எந்த வேற்றுமையும் இல்லை
## அனைவரும் ஒன்றுபட்டு
## கல்விச் சமூகம் ஒன்றை உருவாக்குவோம்
## நமக்காக நாம்!

அதிமேதகு ஜனாதிபதி
மஹிந்த அவர்களின் சிந்தனை

இந்த நாட்டில் தமிழர்கள் வாழலாம் ஆனால் அவர்கள்
உரிமை எதையும் கோரமுடியாது

பொன்சேகாவின் சிந்தனை

## நமக்கு யார் தேவை?
## சிந்திப்போம் செயற்படுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியானதொரு அரசியல் தலைமையின்

# கீழ்



## மனிதாபிமான முறையில்

## எமக்கு வெற்றி தேடித் தந்த

## அனைவரிற்கும் நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# LION OF ASIA





RAVIKUMARR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org